# தினபூமி
thinaboomi.com

சென்னை, ஞாயிறு, மார்ச் 16, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**விரைவில் பூமிக்கு திரும்புகிறார்: சுனிதா வில்லியம்சை அழைத்து வர டிராகன் விண்கலம் சென்றது**
...2-ம் பக்கம்

**தங்கக் கடத்தல் வழக்கில் கன்னட நடிகை ரன்யாவின் ஜாமீன் மனு தள்ளுபடி**
...3-ம் பக்கம்

**இங்கிலாந்து டெஸ்ட் தொடர்: இந்திய அணியின் கேப்டனாக ரோகித் தொடர்வார்: பி.சி.சி.ஐ.**
...6-ம் பக்கம்



**17 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்படும்**

**நெல் சாகுபடியை அதிகரிக்க சிறப்புத் தொகுப்பு திட்டம்**

**கரும்புக்கான சிறப்பு ஊக்கத்தொகை டன் ஒன்றுக்கு 349 ரூபாய் உயர்வு**

# வேளாண் துறைக்கு ரூ.45,661 கோடி ஒதுக்கீடு

## தமிழ்நாடு வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு



● சட்டமன்ற பேரவையில் தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்தார். அப்போது இந்த அறிக்கையை தாக்கல் செய்யும்போது சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, மார்ச் 16-

**தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள் அல்லாத 29 மாவட்டங்களில் நெல் சாகுபடி அதிகரிக்க சிறப்புத் தொகுப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று விவசாயத்திற்காந பட்ஜெட்டை தாக்கல் செய்து வேளாண்மை மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். தமிழகத்தில் பயிர் சாகுபடிக்கான குறுகியகால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 2025-26 ஆம் ஆண்டில் 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ள அவர் 2025-26-ம் நிதியாண்டுக்கு வேளாண் துறைக்கு 45,661 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.**

### முதல்வருடன் சந்திப்பு

2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (சனிக்கிழமை) தாக்கல் செய்தார். தமிழ்நாடு அரசின் 2025-2026ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார். வேளாண் நிதிநிலை அறிக்கை நேற்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில், திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் பச்சை துண்டு அணிந்து பங்கேற்றனர்.

### தமிழ்நாடு பட்ஜெட்...

தமிழக அரசின் 2025-26 ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (மார்ச் 14) தாக்கல் செய்து உரையாற்றினார். பட்ஜெட்டில் பல்வேறு துறைகள் சார்ந்த முக்கிய அறிவிப்புகள், நிதி ஒதுக்கீடுகள் அறிவிக்கப்பட்டன. தொடர்ந்து 2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் நேற்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்து உரையாற்றினார்.

### பல்வேறு அறிவிப்புகள்

நேற்று தாக்கல் செய்யப்பட்ட வேளாண் பட்ஜெட் மூலம், வேளாண் துறைக்கு மொத்தம் ரூ. 45,661 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உழவர் சந்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு 1.40 நிமிடங்கள் உரையாற்றினார் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம். நேற்று தாக்கல் செய்யப்பட்ட வேளாண் பட்ஜெட்டில், நெல் கொள்முதல் மூலம் ரூ. 297 கோடி நேரடியாக விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### மலைவாழ் உழவர்கள்

தமிழக விவசாயிகளுக்கு, பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் வழங்கப்படும், கடன் 2019-20-ல், 1.83 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 2023-24ல் 3.58 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து வணிக வங்கிகள் வழங்கும் பயிர்க் கடனில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 2025-26-ம் ஆண்டில் சுமார் 63 ஆயிரம் மலைவாழ் விவசாயிகள் பயனடையும் வகையில், குறுதானிய சாகுபடி இடுபொருள்கள் விநியோகம், காய்கறிப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், நுண்ணீர்ப்பாசனம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்றவற்றுக்கு மானியம் வழங்கிட 22.80 கோடி ரூபாய் மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், இப்பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### ரூ.10 லட்சம் வரை கடன்

அறுவடைக் காலங்களில் வேளாண் விளைபொருட்களின் அதிக வரத்தால், ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் விதமாக, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண் விளைபொருட்களை இருப்பு வைக்கும் விவசாயிகளுக்கும், வணிகர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் பொருளீட்டுக் கடன் வசதியானது உழவர் உற்பத்தி நிறுவனங்கள் விரிவுபடுத்தப்பட்டு, பத்து லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.

### ரூ.17 ஆயிரம் கோடிக்கு

தமிழகத்தில் பயிர் சாகுபடிக்கான குறுகியகால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 2025-26 ஆம் ஆண்டில் ரூ.17,000 கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்படும். கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான விவசாயிகளின் குறுகியகாலக் கடன் தேவைகளுக்கு 2025-26 ஆம் ஆண்டில் 3,000 கோடி ரூபாய் அளவுக்கு மூலதனக் கடன் வழங்கப்படும்.

(கடைசி பக்கம் பார்க்க)



● தமிழக சட்டமன்ற பேரவையில் நேற்று தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## வேளாண் பட்ஜெட் முக்கிய அம்சங்கள்:

1) "டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி" உருவாக்கப்படும்.
2) ரூ.1.35 கோடியில், திறனுடைய கிராமங்கள் உருவாக்கப்படும்.
3) ரூ.68 கோடியில் 7 மாவட்டங்களில் நீர்வடிப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.
4) வேளாண் விளைபொருட்களுக்கு தர நிர்ணய ஆய்வகங்கள் ரூ.6.16 கோடியில் அமைக்கப்படும்.
5) விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.10 லட்சம் வரை பொருளீட்டு கடன் வழங்கப்படும்.
6) பொது சேகரிப்பு மையங்களில் வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம் செய்யப்படும்.
7) உழவர் சந்தை காய்கறிகளை நுகர்வோர் வீட்டுக்கு எடுத்து செல்லும் திட்டம்.
8) ரூ.8 கோடியில் தமிழ்நாட்டில் அதிக வரத்துள்ள 50 உழவர் சந்தைகளில் கூடுதல் வசதிகள்.
9) 56 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ரூ.39.20 லட்சம் ஒதுக்கீட்டில் ஒருங்கிணைக்கப்படும்.
10) 9 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் தலா 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள்.
11) 79 லட்சத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
12) வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக்கூட்டு மையங்கள் அமைக்கப்படும்.
13) 300 கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.
14) திறந்தவெளி பாசன கிணறுகள் புனரமைக்கப்படும்.
15) 500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தூர் வாருதல், 100 புதிய மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள்.
16) பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்ற, மானிய வழங்க ரூ.1.50 கோடி ஒதுக்கீடு.
17) மலை வாழ் உழவர் முன்னேற்ற திட்டம் செயல்படுத்தப்படும்.
18) வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் மாதம் 2 முறை முகாம் நடத்தப்படும்.
19) 1000 விவசாயிகளுக்கு தனித்துச் சூரியசக்தியால் இயங்கக்கூடிய பம்புசெட்டுகள் வழங்க ரூ.24 கோடி நிதி.
20) கல்லணை கால்வாய்ப் பாசானப் பகுதிகளில் வாய்க்கால்களில் ரூ.13.80 கோடியில் தூர்வாரும் பணிகள்.
21) ரூ.17.37 கோடியில் இ-வாடகை செயலி மூலம் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவது வலுப்படுத்தப்படும்.
22) சிறு, குறு விவசாயிகளின் பயனுக்காக 130 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.10.50 கோடியில் உருவாக்கப்படும்.

(கடைசி பக்கம் பார்க்க)

# வேளாண் பட்ஜெட்டில் பல முத்தான திட்டங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு

சென்னை, மார்ச் 16-

**வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வு மேம்படும் வகையில், பல்வேறு முத்தான திட்டங்களுடன் 45,661 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக வேளாண் பட்ஜெட்-2025 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் துறை அதிகாரிகளுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "நமது வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வு மேம்படும் வகையில், வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவித்தொகை அதிகரிப்பு, முதலமைச்சரின் 1000 உழவர் நலச் சேவை மையங்கள், புதிய தொழில்நுட்பங்கள், சிறு குறு விவசாயிகள் நலன், மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெல்டா அல்லாத மாவட்ட நெல் விவசாயிகளுக்குச் சிறப்புத் தொகுப்புத் திட்டம், வேளாண் பொருட்கள் மதிப்பு கூட்டும் அலகுகள் அமைக்க நிதியுதவி எனப் பல்வேறு முத்தான திட்டங்களுடன் 45,661 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக வேளாண் பட்ஜெட்-2025 வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் வேளாண்மை - உழவர் நலத் துறை அதிகாரிகள் அனைவருக்கும் வாழ்த்துகள்!" என்று முதல்வர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

### நத்தம் புளி, கப்பல்பட்டி முருங்கை உள்பட

# 5 விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறப்படும்

## வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு

சென்னை, மார்ச் 16-

**வேதாரண்யம் முல்லை, நத்தம் புளி, கப்பல் பட்டி முருங்கை உள்ளிட்ட 5 விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறப்படும் என்று வேளாண் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழக சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட வேளாண் பட்ஜெட்டில், 4 ஆண்டுகளில் 35 வேளாண் விளை பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வேதாரண்யம் முல்லை, நத்தம் புளி, கப்பல் பட்டி முருங்கை உள்ளிட்ட 5 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2,500 ஏக்கரில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விருதுநகர், இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும். பனை சாகுபடியை ஊக்குவிக்க பனை மேம்பாட்டு இயக்கத்திற்கு ரூ. 1.65 கோடி நிதி ஒதுக்கீடு. பலா மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் புதிய பலா சாகுபடியை ஊக்குவிக்க ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 5,000 வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள், இ-வாடகை செயலி மூலம் வழங்கப்படும். உழவர்கள் குறைந்த வாடகையில் இயந்திரம் பெற, ரூ.17 கோடியில் வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்கப்படும்.

அனைத்து வேளாண் பணிகளையும் இயந்திரம் ஆக்கும் நோக்கில், ரூ. 3 கோடியில் இது குறித்து உழவர்களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்படும். 300 கிராம இளைஞர்களுக்கு மண் அள்ளும் இயந்திரம் மற்றும் வேளாண் இயந்திரங்கள் தொடர்பாக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். வேளாண் வணிகத்துறை மூலம் 100 மதிப்பு கூட்டு அலகு அமைக்கும் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும். வட்டாரங்கள் தோறும் தேர்வு செய்யப்பட்ட மையங்களில் வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்யப்படும். உழவர்களுக்கு 10 லட்சம் வரை முதலீட்டு கடன் வழங்கப்படும். இந்திய அளவில் முந்திரி ஏற்றுமதியில் தமிழ்நாடு 2ம் இடத்தில் உள்ளது. இதனை ஊக்குவிக்க, ரூ. 10 கோடியில் உழவர்கள் மேம்பட முந்திரி வாரியம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்டா மாவட்டங்கள், தென் தமிழகத்தில் மழை

## சென்னை வானிலை மையம் தகவல்

சென்னை, மார்ச் 16-

**தென் தமிழகம், டெல்டா மாவட்டங்களில் அடுதத் 2 நாட்கள் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, இன்று (16-03-2025) மற்றும் நாளை (17-03-2025): தென்தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.


18-03-2025 மற்றும் 19-03-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 20-03-2025 மற்றும் 21-03-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதேபோல், அதிகபட்ச வெப்பநிலை மாறுதலின்படி, நாளை (17-03-2025) வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 டிகிரி செல்சியஸ் உயரக்கூடும்.


இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -200.85 | -73.30 |
| பாயின்ட் 73,828.91 | பாயின்ட் 22,397.20 |



**தங்கம்**
1 சவரன் ₹65,760
1 கிராம் ₹8,220



**வெள்ளி**
1 கிலோ ₹112,000
1 கிராம் ₹112.00

**டாலர்** ₹86.95

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

## விரைவில் பூமிக்கு திரும்புகிறார்:
# சுனிதா வில்லியம்சை அழைத்து வர டிராகன் விண்கலம் சென்றது



**புளோரிடா, மார்ச் 16-**

சர்வதேச விண்வெளி மையத்தில் கடந்த 9 மாத காலமாக சிக்கியுள்ள இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர் வில்மோர் ஆகியோரை பூமிக்கு அழைத்து வர ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் (க்ரூ-10) விண்கலன் வெற்றிகரமாக புறப்பட்டுள்ளது.

டிராகன் விண்கலனில் தற்போது சர்வதேச விண்வெளி மையத்துக்கு புறப்பட்டுள்ள விண்வெளி வீரர்களிடம் தங்களது பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் பூமி திரும்புகின்றனர்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஸ்பேஸ் எக்ஸ் மூலம் விண்வெளி மையத்துக்கு சென்ற இரண்டு விண்வெளி வீரர்களும் பூமி திரும்புகின்றனர். டிராகன் (க்ரூ-10) விண்கலனில் அமெரிக்காவைச் சேர்ந்த 2 பேர் மற்றும் ஜப்பான், ரஷ்யாவை சேர்ந்த ஒருவர் என நான்கு பேர் தற்போது விண்வெளி மையத்துக்கு சென்றுள்ளனர்.

அமெரிக்காவின் போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர். இருவரும் 10 நாட்கள் ஆய்வு செய்து விட்டு பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டு இருந்த நிலையில், விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது.

சுனிதா வில்லியம்ஸும், வில்மோரும் சுமார் 9 மாதங்களுக்கும் மேலாக விண்வெளியில் தங்கி உள்ளனர். அவர்களுக்கு பதிலாக புதிய வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்புவதில் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வந்தது. அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோரை பூமிக்கு அழைத்து வரும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இதன்படி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் கடந்த 12-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட இருந்தது. ஆனால் தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடைசி நேரத்தில் விண்கலம் செலுத்தப்படுவது நிறுத்தப்பட்டது. இந்நிலையில் தற்போது டிராகன் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

## போர் நிறுத்தம் தொடர்பாக
# ட்ரம்ப் - புதின் முக்கிய பேச்சுவார்த்தை

**மாஸ்கோ, மார்ச் 16-**

உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தொலைபேசியில் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போரை நிறுத்த பிரதமர் நரேந்திர மோடி அதிதீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த ஆண்டு ரஷ்யா, உக்ரைனில் தனித்தனியாக அரசு முறை பயணம் மேற்கொண்ட அவர், இரு நாடுகளின் அதிபர்களிடமும் அமைதி பேச்சுவார்த்தை நடத்தினார்.

கடந்த ஜனவரியில் அமெரிக்க அதிபராக பதவியேற்ற டொனால்டு ட்ரம்ப், ரஷ்யா-உக்ரைன் போரை நிறுத்த தீவிரம் காட்டி வருகிறார். இதுதொடர்பாக சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

கடந்த 11-ம் தேதி அமெரிக்கா, உக்ரைன் அதிகாரிகள் ரியாத்தில் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது 30 நாட்கள் போர் நிறுத்த திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்தது. இதை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஏற்றுக் கொண்டார்.

இந்நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், மாஸ்கோவில் கூறியதாவது: 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் போர் நிறுத்தத்தை அமல் செய்வதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இதுதொடர்பாக அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறோம். இவ்வாறு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விக்கோப், மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் புதினை ரகசியமாக சந்தித்துப் பேசினார். அப்போது 30 நாட்கள் போர் நிறுத்தம் தொடர்பாக இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர். இதன்பிறகு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை, சிறப்பு தூதர் ஸ்டீவ் விக்கோப் சந்தித்து நீண்ட நேரம் விவாதித்தார்.

## பாக். உள்ளிட்ட 41 நாடுகளுக்கு
# பயணத்தடைகளை விதிக்க ட்ரம்ப் நிர்வாகம் பரிசீலனை

**வாஷிங்கடன், மார்ச் 16-**

பாகிஸ்தான், பூடான் உள்ளிட்ட 41 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்கு கடுமையான புதிய பயணத் தடைகள் விதிக்க அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நிர்வாகம் பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் புதிய தடை குறித்த குறிப்பாணையில் மொத்தம் 41 நாடுகள் மூன்று தனித்தனி குழுக்களுக்காக பிரிக்கப்பட்டுள்ளன. அதில் முதல் குழுவில் ஆப்கானிஸ்தான், ஈரான், சிரியா, கியூபா, வடகொரியா, லிபியா, சோமாலியா, சூடான், வெனிசுலா மற்றும் ஏமன் ஆகிய 10 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்நாடுகள் முழுமையான விசா இடைநீக்கத்தை எதிர்கொள்ளலாம்.

இரண்டாவது குழுவில் எரித்ரேயா, ஹைதி, லாவோஸ். மியான்மர் மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இவை, சுற்றுலா மற்றும் மாணவர் விசா அதேபோல் பிற புலம்பெயர்வு விசாக்களைப் பாதிக்கும் பகுதி அளவிலான இடைநீக்கத்தை எதிர்கொள்ளும். மூன்றாவது குழுவில் பாகிஸ்தான், பூடான் உள்ளிட்ட 26 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகள் 60 நாட்களுக்குள் குறைபாடுகளை சரி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றால், அவற்றுக்கு விசா வழங்கலை பகுதியளவில் நிறுத்தி வைக்க பரிசீலிக்கப்பட்டு வருவதாக அந்தக் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத அமரிக்க அதிகாரி ஒருவர் கூறுகையில் இந்தப் பட்டியலில் மாற்றம் இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். மேலும், இது அமெரிக்க வெளியுறுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ உள்ளிட்ட நிர்வாகத்தினரால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். இந்த நடவடிக்கை, அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் முதல் பதவி காலத்தில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் 7 நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு விதித்த தடையினை நினைவூட்டுகிறது.

தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கண்டறிய அமெரிக்காவுக்குள் நுழைய விரும்பும் எந்த ஒரு வெளிநாட்டினரையும் தீவிரமான பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று ஜன.20 ம் தேதி ட்ரம்ப் ஒரு நிர்வாக உத்தரவினை பிறப்பித்திருந்தார். இந்த ஆணையின் படி, எந்தெந்த நாடுகளுக்கு முழுமையான அல்லது பகுதி பயணத்தடைகளை விதிக்கலாம் என பட்டியலை தயாரிக்குமாறு பல அமைச்சரவை உறுப்பினர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. டொனால்டு ட்ரம்பின் இந்த உத்தரவு, அவரது 2-வது பதவி காலத்தின் தொடக்கத்தில் துவக்கி இருக்கும் குடியேற்ற கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக பார்க்கப்படுகிறது.

# வாட்ஸ்ஆப்பில் புதிய வசதி அறிமுகம்

**கலிபோர்னியா, மார்ச் 16-**

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் வாட்ஸ்ஆப்பில் பயனர்களின் வசதிக்கு ஏற்ப அவ்வப்போது புதிய அம்சங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், வாட்ஸ்ஆப்பில் மேலும் ஒரு புதிய அம்சம் அறிமுகமாகவுள்ளது.

வாட்ஸ்ஆப்பில் குரூப் சாட்களில் நிகழ்வுகளை நினைவூட்டுவதற்கு கிரியேட் ஈவென்ட் என்ற வசதி ஏற்கெனவே இருந்து வருகிறது. இந்நிலையில் தனிப்பட்ட சாட்களிலும் கிரியேட் ஈவென்ட் வசதி என்ற வசதி கொண்டு வரப்பட்டுள்ளது. சோதனையில் இருந்த இந்த புதிய வசதி தற்போது ஆண்ட்ராய்டு, ஐபோன்களுக்கு அறிமுகமாகியுள்ளது.

# திடீர் மின் தடையால் இருளில் மூழ்கிய கியூபா

**ஹவானா, மார்ச் 16-**

கியூபாவில் திடீரென ஏற்பட்ட மிகப்பெரிய அளவிலான மின்வெட்டு காரணமாக அந்நாட்டின் பல மாகாணங்கள் இருளில் மூழ்கின.

கியூபா தலைநகரான ஹவானா அருகிலுள்ள தீஸ்மெரோ துணை மின் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு மின் தடை ஏற்பட்டது. இதன் காரணமாக தெற்கு கியூபா உள்பட நாட்டின் பல மாகாணங்களில் லட்சக்கணக்கான மக்கள் இருளில் மூழ்கியுள்ளனர். இது தேசிய மின்சாரத் துறையின் தோல்வி. இதனை சரிசெய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது' என கியூபா எரிசக்தி மற்றும் சுரங்கத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த மின் தடையைத் தொடர்ந்து ஹவானா உள்பட பல மாகாணங்களில் ஜெனரேட்டர்கள் உள்ள இடங்கள் அன்றி மற்ற இடங்கள் இருளாக உள்ளன. இணைய சேவையும் நாடு முழுக்க பாதிப்படைந்துள்ளது. அதிக தேவை ஏற்படும் நேரங்களில் பொதுவாக 3,250 மெகாவாட் மின் தேவை இருக்கும். ஆனால், தற்போது மின் தடையால் 1,380 மெகாவாட் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன்படி, நாட்டின் மொத்த மின் தேவையில் 42 சதவீதம் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. சமீபமாக ஏற்பட்ட மின் தடை சம்பவங்களில் இது பெரியது இல்லை என்று கூறப்படுகிறது.

கியூபா கடந்தாண்டு இறுதியில் மட்டும் 3 பெரிய மின்சார செயலிழப்புகளைக் கண்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் இருந்த இந்நாடு, முழுவதுமாக இருளில் மூழ்கியது. இங்குள்ள மின்சாரக் கட்டுமானங்கள் அடிக்கடி செயலிழக்கின்றன. முக்கிய வேலை நேரங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்குகின்றன. எரிபொருள் பற்றாக்குறை, உழமையான உள்கட்டமைப்பு காரணமாக இவை நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

பெரும்பாலான இடங்களில் சமைப்பதற்கும், நீர் எடுப்பதற்கும் மின்சாரத் தேவை உள்ளது. இதனைத் தொடர்ந்து, நாடு முழுக்க 12-க்கும் மேற்பட்ட சூரிய மின் உற்பத்தி பூங்காக்களை நிறுவ அரசு முடிவெடுத்த நிலையில், இந்தாண்டு அவை செயல்பாட்டுக்கு வரவுள்ளன. இதனால், மின் தடை பிரச்சனைகள் குறையுமென்று கூறப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அமெரிக்காவில் விபத்து: 5 பேர் பலி

**அமெரிக்கா, மார்ச் 16-**

அமெரிக்காவில், ஹவார்ட் மற்றும் பார்மெர் இடையிலான சாலையில் டிரக் உட்பட 17 வாகனங்கள் கடந்த வியாழக்கிழமை இரவு ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இதில் குழந்தை உள்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்.

மேலும் 11 பேர் காயமடைந்த நிலை உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் இரண்டு பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

**16-03-2025**




**மேஷம்:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**ரிஷபம்:-** திறமையை முழுமையாக காட்டிச் செயல்பட்டாலும் மேலிடத்தில் திருப்தி இருக்காது. வாகனங்களில் நிதானமாகச் சென்றால் தேவையற்ற விபத்துகளை தவிர்க்கலாம்.

**மிதுனம்:-** வீட்டில் திருட்டை தவிர்க்க எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை. காரியத்தடைகள் மற்றும் பண இழப்புகள் ஏற்படும்.

**கடகம்:-** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து ஏற்றம் தரும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:-** இன்று சுமாரான நாள். குடும்பத்தாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு இருப்பது நல்லது. தோல்விகளைக் கண்டு துவளாதீர் கள். முயன்றால் வெற்றி நிச்சயம்.

**கன்னி:-** படுக்கை சுகங்கள், நல் ஆடைகள், நண்பர்கள் அருகாமை, நல்ல அதிர்ஷ்டம் என எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். வருமானம் சேரும் வளம் மிக்க நாள்.

**துலாம்:-** வீண்செலவுகள் அதிகரிக்கும். வாகனங்களில் வேகத்தைக் குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும். உறவுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:-** பணவரவுகள் அதிகரிப்பதால் உற்சாகம் பிறக்கும். குழந்தைகள் பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் பணிவிடைகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**தனுசு:-** பிறருக்கு உதவி புரிவதால் பேரின்பம் அடைவார்கள். படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு அதிகரித்து மனம் மகிழும்.

**மகரம்:-** தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கோவில் திருப்பணிகள் மற்றும் அன்னதானங்கள் செய்ய மனம் விழையும். வாழ்க்கையின் வசந்த காலம் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**கும்பம்:-** அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் பயன் பெறலாம். மனைவியால், குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படலாம். பொருட்களை கவனமாக பாதுகாத்து இழப்பைத் தவிர்க்கலாம்.

**மீனம்:-** சாதுர்யப் பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பல வழிகளில் பணவரவு உண்டாகிப் பெரிய மனிதர் எனப் பெயர் எடுப்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயங்கள் ஏற்படும்.

# மாசாணியம்மன் கோவில் நிதியில் இருந்து ரிசார்ட் கட்டுவதற்கான அரசாணை வாபஸ்
## ஐகோர்ட்டில் தமிழக அரசு தகவல்

**சென்னை, மார்ச் 16-**

மாசாணியம்மன் கோயில் நிதியில் இருந்து ரூ.1.4 கோடி செலவில் ஊட்டியில் ரிசார்ட் கட்டுவதாக தமிழக அரசு பிறப்பித்த அரசாணை திரும்பப் பெறப்பட்டதை அடுத்து வழக்கை முடித்து வைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி மாசாணி அம்மன் கோயிலுக்கு பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய ரூ.100 கோடி வங்கியில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் இருந்து ரூ.1.4 கோடி செலவில் ஊட்டியில் காந்தல் வட்டத்தில் உள்ள சுப்ரமணிய சுவாமி கோயில் அருகே ரிசார்ட் கட்ட தமிழக அரசு முடிவு செய்து அரசாணையும் வெளியிட்டது.

இந்த அரசாணையை ரத்து செய்யக் கோரி செங்கல்பட்டைச் சேர்ந்த பார்த்தசாரதி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி கே.ஆர் ஶ்ரீராம் மற்றும் நீதிபதி முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பி.ஜெகன்நாத், கோயில் நிதியை கோயில் நலன் சார்ந்த பணிகளுக்கு மட்டுமே செலவிட வேண்டுமென பல்வேறு வழக்குகளில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் அதை மீறும் வகையில் தற்போது மாசாணியம்மன் கோயில் நிதியில் இருந்து ஊட்டியில் ரிசார்ட் கட்டுவதாக தமிழக அரசு அரசாணை வெளியிட்டிருப்பது நீதிமன்ற உத்தரவுகளை மீறுவதாகும் என்றார்.

அப்போது அரசு தரப்பில் ஊட்டியில் பக்தர்களுக்கான தங்குமிடம் கட்டப்படும் என்பதற்குப் பதிலாக தவறுதலாக ரிசார்ட் என் அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. எனவே இது தொடர்பான அரசாணை வாபஸ் பெறப்படும் என்றார். அதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளனர்.

# காய்கறிகளை நுகர்வோர் வீடுகளுக்கு நேரில் டெலிவரி செய்ய புதிய திட்டம்
## வேளாண் பட்ஜெட்டில் தகவல்

**சென்னை, மார்ச் 16-**

உழவர் சந்தை காய்கறிகளை நுகர்வோர் வீடுகளுக்கு டெலிவரி செய்யும் வகையில், உள்ளூர் இணைய வர்த்தகத்துடன் இணைக்கப்படும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதி நிலை அறிக்கையை அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்து உரையாற்றினார்.

அதில் வெளியாகியிருக்கும் அறிவிப்புகளில்,

வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான "டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி" உருவாக்கப்படும்!

சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, மதுரையில் உயிர்ம வேளாண் விளைபொருட்களுக்கு தர நிர்ணய ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 9,36,000 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 269.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் கால நிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் 2030, 2050 ஆண்டுகளில் பயிர்களில் ஏற்படும் பாதிப்புகள் கணிக்கப்பட்டுள்ளன.

உழவர் சந்தை காய்கறிகளை நுகர்வோர் வீடுகளுக்கு டெலிவரி செய்யும் வகையில், உள்ளூர் இணைய வர்த்தகத்துடன் இணைக்கப்படும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்

அதிக லாபம் தரும் மாற்றுப் பயிர்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிக்கென ரூ. 1.35 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிப்பு வெளியானது.

# வான்வழி தாக்குதலில் முக்கிய ஐ.எஸ். தலைவர் படுகொலை
## ஈராக் பிரதமர் தகவல்



**பாக்தாத், மார்ச் 16-**

ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிக் ஸ்டேட் தலைவர் அபு கதீஜா எனும் அப்துல்லா மக்கி மொஸ்லே அல்-ரிபாய் கொல்லப்பட்டதாக ஈராக் பிரதமர் முகமது ஷியா அல்-சூடானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், இருள் மற்றும் பயங்கரவாதத்தின் சக்திகளுக்கு எதிராக ஈராக்கியர்கள் தங்கள் அற்புதமான வெற்றிகளைத் தொடர்கின்றனர். ஐஎஸ் பயங்கரவாத அமைப்பின் துணை கலீபா-வும், உலகின் மிகவும் ஆபத்தான பயங்கரவாதிகளில் ஒருவருமான அபு கதீஜா என்றழைக்கப்படும் அப்துல்லா மக்கி மொஸ்லே அல்-ரிஃபாய் கொல்லப்பட்டார் என தெரிவித்துள்ளார்.

ட்ரூத் சமூக வலைதளத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், ஈராக்கில் தப்பியோடிய ஐஎஸ் தலைவர் நேற்று கொல்லப்பட்டார். ஈராக் அரசாங்கம் மற்றும் குர்திஷ் பிராந்திய அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து நமது துணிச்சலான போர்வீரர்களால் அவர் இடைவிடாமல் வேட்டையாடப்பட்டார். வலிமையால் அமைதி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேற்கு ஈராக்கில் உள்ள அன்பர் மாகாணத்தில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஐஎஸ் தலைவர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். மேலும் அவர், வியாழக்கிழமை இரவு இந்த தாக்குதல் நடந்தது, எனினும் வெள்ளிக்கிழமை அன்றே அல்-ரிஃபா யின் மரணம் உறுதி செய்யப்பட்டது என்று அவர் கூறியுள்ளார்.

சிரியாவின் இடைக்கால வெளியுறவு அமைச்சர் அசாத் ஹசன் அல்-ஷிபானி ஈராக்கிற்கு முதல் முறையாக பயணம் செய்துள்ள நிலையில், இந்த அறிவிப்பு வந்துள்ளது. ஐஎஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவதாக உறுதியளித்துள்ளன.

# கச்சத்தீவு அந்தோணியார் ஆலய திருவிழா கோலாகலம்

**கச்சத்தீவு, மார்ச் 16-**



இந்தியா-இலங்கை பக்தர்களின் பாரம்பரிய உறவுத் திருவிழாவாகக் கருதப்படும் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஆலயத்தின் முன்புள்ள கொடிமரத்தில் நெடுந்தீவு பங்குத் தந்தை பத்திநாதன், ராமேஸ்வரம் வேர்க்கோடு பங்குத் தந்தை அசோக் வினோ ஆகியோர் அந்தோணியாரின் உருவம் பதித்த கொடியை ஏற்றினர். முன்னதாக இந்த விழாவில் பங்கேற்க இந்திய பக்தர்களுக்கு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் மறை மாவட்ட பிஷப் அழைப்பு விடுத்தார். இதன்படி, கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்க இந்தியாவில் இருந்து சுமார் 3 ஆயிரத்து 414 பேர் நேற்றுமுன்தினம் படகுகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

தொடர்ந்து கச்சத்தீவு திருவிழா நேற்று கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இதில் இருநாட்டு பக்தர்களும் ஜெபமாலையை சுமந்து வந்த சிலுவை பாதை நிகழ்ச்சியும், நற்கருணை ஆராதனையும், அந்தோணியார் தேர் பவனியும் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து வந்திருந்த பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் உள்ளிட்ட சுமார் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

# வேளாண்மை பட்ஜெட் 2025 -2026

## 9 லட்சம் குடும்பங்களுக்கு பழச்செடித் தொகுப்புகள்

### தமிழக வேளாண் பட்ஜெட்டில் தகவல்

**சென்னை, மார்ச் 16-**

பப்பாளி, கொய்யா, எலுமிச்சை செடி தொகுப்பு 9 லட்சம் குடும்பங்களுக்கு 75 சதவிகிதத்தில் மானிய விலையில் வழங்கப்படும் என வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

தமிழக அரசின் 2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (மார்ச்.15) தாக்கல் செய்தார்.

முன்னதாக, சென்னை மெரீனாவில் உள்ள அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில்,

* 9 லட்சம் குடும்பங்களுக்கு பழச்செடித் தொகுப்புகள்.
* 2025-2026 ஆம் ஆண்டில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் என்னும் புதிய திட்டம் ரூ.125 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.
* 9 லட்சம் குடும்பங்களுக்கு 75 சதவிகிதம் மானியத்தில் பழச்செடித் தொகுப்புகள் வழங்கப்படும்.
* 1 லட்சம் இல்லங்களுக்கு 17 சதவிகிதம் மானியத்தில், பயறுவகை விதைகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்.
* 5 காளான் உற்பத்தி கூடங்கள் அமைத்திட மானியம் வழங்கப்படும்.
* 15 லட்சம் குடும்பங்களுக்கு காய்கறி விதைகள் தொகுப்புகள்
* 6 வகையான காய்கறிகள் விதைகள் அடங்கிய தொகுப்பு 15 லட்சம் குடும்பங்களுக்கு 75 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்படும்.
* ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் எனும் புதிய திட்டம் ரூ.125 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.
* 360 நாட்டுக்கோழிப் பண்ணைகள் நிறுவும் திட்டம்.
* ஊரகப்பகுதியில் உள்ள ஏழை மகளிருக்கு நாட்டுக் கோழிப்பண்களை அமைப்பதற்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம்
* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கான நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பனை மேம்பாட்டு இயக்கம்: வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 16-**

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பனை சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கவும் "பனை மேம்பாட்டு இயக்கம்" உருவாக்கப்படும் என வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் 2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சனிக்கிழமை (மார்ச்.15) தாக்கல் செய்தார்.

இந்த நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில்,

தமிழ்நாட்டில் முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரி சார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கவும், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு முந்திரி வாரியம் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் மாநில மரமான பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு பத்து லட்சம் பனை விதைகள், பனை மதிப்புக்கூட்டப் பொருள் தயாரிக்கும் கூடங்கள், மதிப்புக்கூட்டுதல் பயிற்சி ஆகிய இனங்களுக்கு, பனை மேம்பாட்டு இயக்கத்தில் ஒரு கோடியே 65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 20 ஆயிரம் நபர்கள் பயனடைவார்கள்.

புதிய ரக பலா சாகுபடி பரவலாக்கம், பலாவில் ஊடுபயிர் சாகுபடி போன்ற திட்டகூறுகள் ஊக்குவிக்கப்படும். இதற்கென ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1.45 மணி நேரம் பட்ஜெட்டை வாசித்ததுதான் சாதனை; விவசாயிகளுக்கு நன்மை இல்லை

### எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

**சென்னை, மார்ச் 16-**

கிட்டத்தட்ட 1.45 மணி நேரம் விவசாய பட்ஜெட்டை வாசித்தது சாதனை படைத்திருக்கிறார்கள். வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு நன்மை எதுவும் இல்லை" என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்தார். பட்ஜெட் தாக்கலுக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவைக்கு வெளியே செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: தி.மு.க.-வினர் விவசாயிகளை ஏமாற்றுவதில் வல்லவர்கள் என்பதற்கு பொருத்தமான, உதாரணமான விவசாய பட்ஜெட் இது. விவசாயத்துக்கு தனி பட்ஜெட் என்றுகூறி, ஏதோ தனி பட்ஜெட் போட்டால், விவசாயிகள் வளர்ந்து, செழித்து வளமாக வாழ்வோம் என விவசாயிகள் கனவு கண்டனர். ஆனால், அது ஒரு போலித் தோற்றம் என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது.

விவசாய பட்ஜெட் என்ற பெயரில் கிட்டத்தட்ட 1.45 மணி நேரம் விவசாய பட்ஜெட்டை வாசித்தது சாதனை படைத்திருக்கிறார்கள். அது தான் தமிழக வேளாண் பட்ஜெட்டின் சாதனை. இந்த விவசாய பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு நன்மை எதுவும் இல்லை. ஏமாற்றம்தான் கிடைத்துள்ளது. வேளாண்துறையைச் சாரந்த ஊரக வளர்ச்சித் துறை, பட்டு வளர்ச்சித் துறை, கால்நடைத் துறை, பால்வளத்துறை, கூட்டுறவுத்துறை, மீன்வளத்துறை, வருவாய்த்துறை, தொழில்துறை, மின்சாரத்துறை, நீர்வளத்துறை அனைத்தையும் கலந்து ஒரு அவியல் போல வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடிய திட்டமோ, நன்மையோ இல்லை. அ.தி.மு.க. ஆட்சியில், உணவு பதப்படுத்தும் பூங்கா, உழவர் உற்பத்தித் குழு போன்ற திட்டங்களை தி.மு.க. அரசு கைவிட்டுவிட்டது. ஆர்கானிக் ஃபார்மிங் என ஒரு துறைக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு என அறிவிக்கப்பட்டது எல்லாம் நின்றுவிட்டது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் தி.மு.க. ஆட்சியில் சாகுபடி பரப்புக் குறைந்து வருகிறது. பயிர் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த அரசு முன்வருவதில்லை. பயிர் இழப்பீடுகள் கிடைப்பதில்லை. குறுவை சாகுபடிக்கு தொடர்ந்து 3 ஆண்டுகளாக பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை" என்று அவர் கூறினார்.

## பாசனக் கிணறு, பம்பு செட், உழவர் சந்தை: வேளாண் பட்ஜெட்டில் அதிரடி அறிவிப்புகள்

**சென்னை, மார்ச் 16-**

தமிழகத்தில் உள்ள பாசனக் கிணறுகளை சீரமைத்தல், சூரிய சக்தி பம்பு செட் அமைத்துத் தரப்படும், உழவர் சந்தைகளுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று வேளாண் பட்ஜெட்டில் அதிரடி அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

தமிழக வேளாண் பட்ஜெட் பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. தமிழக அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

அதில், இ-வாடகை செயலி மூலம் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதை வலுப்படுத்து ரூ.17.37 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். சிறு,குறு விவசாயிகளின் பயனிற்காக 130 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.10.50 கோடியில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் அதிக வரத்துள்ள 50 உழவர் சந்தைகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதற்காக ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் 56 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஒருங்கிணைக்க ரூ.39.20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 9 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் தலா 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் ரூ.20 கோடி செலவில் அமைக்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ.50.79 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். வேளாண் விளைபொருட்களுக்கான 100 மதிப்புக்கூட்டு மையங்கள் ரூ.50 கோடியில் அமைக்கப்படும். 300 கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்க ரூ.1.84 கோடி ஒதுக்கீடு.

திறந்த வெளி பாசன கிணறுகளை புனரமைக்க ரூ.2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை இயந்திரங்களைப் பயன்படுத்தி, 500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தூர் வாருதல் மற்றும் 100 புதிய மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ரூ.2.75 கோடியில் உருவாக்கப்படும்.

புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகள் வாங்கிட, பழைய மின்மோட்டார் பம்புசெட்டுகளை மாற்றிட 1000 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும். இதற்கு ரூ.1.50 கோடி ஒதுக்கீடு. மின்சார இணைப்பு இல்லாத 1000 விவசாயிகளுக்கு தனித்துச் சூரியசக்தியால் இயங்கக் கூடிய பம்புசெட்டுகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும். இதற்கு ரூ.24 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

காவேரி, வெண்ணாறு, வெள்ளாறு வடிநிலப்பகுதிகளிலும், கல்லணை கால்வாய்ப்பாசனப் பகுதிகளிலும் உள்ள "சி" மற்றும் "டி" பிரிவு வாய்க்கால்களில் 2,925 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகளுக்கு ரூ.13.80 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 20 மாவட்டங்களில் மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம்

**சென்னை, மார்ச் 16-**

தமிழகத்தில் 20 மாவட்டங்களில் மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் செயல்படுத்தப்படும் என அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் நேற்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்து உரையாற்றினார்.

பேரவையில் பேசிய அவர்,

2025-26 ஆம் ஆண்டில் சுமார் 63 ஆயிரம் மலைவாழ் உழவர்கள் பயனடையும் வகையில், குறுதானிய சாகுபடி, இடுபொருள்கள் விநியோகம், காய்கறிப்பயிர்களில் பரப்பு விரிவாக்கம், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், நுண்ணீர்ப்பாசனம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்றவற்றிற்கு மானியம் வழங்கிட 22 கோடியே 80 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மலைவாழ் உழவர் முன்னேற்றத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், இப்பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டம் திருவண்ணாமலை. நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருப்பத்தூர். திருநெல்வேலி, வேலூர், கன்னியாகுமரி, தேனி, தென்காசி, விருதுநகர், கிருஷ்ணகிரி, தருமபுரி. ஈரோடு, திருப்பூர், விழுப்புரம், கோயம்புத்தூர் ஆகிய 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்" என்றார்.

## அடுத்த மாதம் இலங்கை செல்கிறார் பிரதமர் மோடி

**புதுடில்லி, மார்ச் 16-**

பிரதமர் மோடி அடுத்த மாத தொடக்கத்தில் இலங்கைப் பயணம் மேற்கொள்ள விருப்பதாக இலங்கை அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் ஒதுக்கீடு குறித்த கேள்விக்குப் பதிலளிக்கும்போது வெளியுறவு அமைச்சர் விஜிதா ஹேரத் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயகாவின் டில்லி பயணத்தின்போது செய்யப்பட்ட ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்காக, அடுத்த மாதத் தொடக்கத்தில் பிரதமர் மோடி இலங்கைக்கு வர உள்ளார். மேலும் அண்டை நாடான இந்தியாவுடன் நாங்கள் நெருங்கிய உறவைப் பேணி வருவதாகவும் அவர் கூறினார்.

அதிபராக பதவியேற்று திசாநாயகாவின் முதல் இந்தியப் பயணத்திலேயே இருதரப்பு உறவு குறித்தும், பல்வேறு ஒப்பந்தங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. பிரதமர் மோடியின் வருகையின் போது சம்பூர் சூரிய மின் நிலையத்தைத் திறப்பதுடன் கூடுதலாகப் பல புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும்.

2023ஆம் ஆண்டில் கிழக்கு திரிகோணமலையின் சம்பூர் நகரில் 135 மெகாவாட் சூரிய மின் நிலையத்தைக் கட்ட இலங்கை மின் வாரியமும், இந்தியாவின் அனல் மின் வாரியமும் ஒப்புக் கொண்டன. தேசிய நலனைப் பேணுவதற்காகப் பணியாற்றும் போது எங்கள் வெளியுறவுக் கொள்கையில் நாங்கள் நடுநிலையாக இருப்போம் என்றும் ஹெராத் கூறினார். 2015-ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கை தீவு நாட்டிற்குப் பிரதமர் மோடி மேற்கொள்ளும் நான்காவது பயணம் இதுவாகும்.

## பவன் கல்யாண் பேச்சுக்கு கனிமொழி எம்.பி. பதிலடி

**சென்னை, மார்ச் 16-**

இந்தி மொழி குறித்த பவன் கல்யாணின் பேச்சுக்கு கனிமொழி எம்.பி. பதிலடி கொடுத்துள்ளார்.

தமிழகத்தில் மும்மொழி கொள்கைக்கு அரசியல் கட்சி தலைவர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் லாப நோக்கத்துக்காக தமிழ் படங்களை இந்தியில் டப்பிங் செய்வதை மட்டும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், ஏன் அனுமதிக்கிறார்கள்? என்று ஜனசேனா கட்சியின் தலைவரும், ஆந்திர துணை முதல்வருமான பவன் கல்யாண் கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்நிலையில், பவன் கல்யாணின் பேச்சுக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி பதிலடி கொடுத்துள்ளார். இது தொடர்பாக தனது 'எக்ஸ்' தளத்தில் பதிவு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில், "மொழி தடைகளைத் தாண்டி திரைப்படங்களைப் பார்க்க தொழில்நுட்பம் நம்மை அனுமதிக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

மேலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பதற்கு முன் பவன் கல்யாண் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட ஒரு பதிவை கனிமொழி எம்.பி. பகிர்ந்துள்ளார். அதில், "வட இந்திய அரசியல் தலைமை இந்தியாவின் கலாசார பன்முகத்தன்மையை புரிந்து கொண்டு மதிப்பளிக்க வேண்டும்" என்று பவன் கல்யாண் கூறியிருக்கிறார். இதையும், பவன் கல்யாணின் தற்போதைய பேச்சையும் குறிப்பிட்டு, 'பா.ஜ.க.வுக்கு முன், பா.ஜ.க.வுக்கு பின்' என்று கனிமொழி எம்.பி. பதிவிட்டுள்ளார்.

### தங்கக் கடத்தல் வழக்கில்

## கன்னட நடிகை ரன்யா ஜாமீன் மனு தள்ளுபடி

**கர்நாடகா, மார்ச் 16-**



தங்கக் கடத்தல் வழக்கில் கைதான கன்னட நடிகை ரன்யா ராவின் ஜாமீன் மனுவை சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. நடிகையும் கர்நாடக காவல் துறை டி.ஜி.பி. கே.ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளுமான ரன்யா ராவ் (33), துபையில் இருந்து தங்கம் கடத்தி வந்தபோது, பெங்களூரு விமான நிலையத்தில் பிடிபட்டார்.

கடந்த ஓராண்டில் பல்வேறு நாடுகளுக்கு அவர் பயணம் செய்திருப்பதும், துபாய்க்கு அடிக்கடி சென்று வந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் பெங்களூரு மத்திய பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, பெங்களூருவில் பொருளாதார குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி ரன்யா தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் மார்ச் 12 விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம் ரன்யாவின் ஜாமீன் மனு மீதான உத்தரவை வெள்ளிக்கிழமை ஒத்திவைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### "அவரிடமே கேளுங்கள்"

## செங்கோட்டையன் குறித்த கேள்விக்கு இ.பி.எஸ். பதில்

**சென்னை, மார்ச் 16-**

என்னை சந்திப்பதை ஏன் தவிர்த்தார் என்பது குறித்து அவரிடமே சென்று கேளுங்கள் என்று செங்கோட்டையன் குறித்த கேள்விக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார்.

2025-26-ம் நிதி ஆண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் உழவர் நலன் மற்றும் வேளாண்மை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்தார். பேரவைக் கூட்டத்துக்கு முன்னர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செங்கோட்டையன், சபாநாயகர் அப்பாவுவைச் சந்தித்தார். அவர் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் தலைமையில் நடந்த அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் குழு ஆலோசனையில் கடந்த இரண்டு நாட்களாக கலந்துகொள்ளவில்லை. இந்நிலையில், பட்ஜெட் தாக்கலுக்குப் பின்னர் செய்தியாளர்களை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்தித்தார். அப்போது அவரிடம், அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செங்கோட்டையன் கடந்த இரு தினங்களாக உங்களைச் சந்திப்பதை தவிர்ப்பதற்கான காரணம் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "அதை அவரிடம் கேளுங்கள். காரணம், அவரைக் கேட்டால்தானே தெரியும்?! என்னை சந்திப்பதை அவர் ஏன் தவிர்த்தார் என்பது குறித்து அவரிடம் சென்று கேளுங்கள். இதெல்லாம் இங்கே கேட்கவேண்டிய கேள்வி இல்லை. தனிப்பட்ட முறையில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை எல்லாம் இங்கே பேசாதீர்கள்.

அ.தி.மு.க. சுதந்திரமாக செயல்படுகின்ற கட்சி. தி.மு.க. போல அடிமை ஆட்கள் இங்கு கிடையாது. நான் ஒரு சாதாரண தொண்டன். தலைவன் கிடையாது. தி.மு.க. போல வாரிசு அரசியல் இங்கு கிடையாது. எங்களுக்கு ஒரே எதிரி தி.மு.க. தான். மற்ற கட்சிகள் எல்லாம் எங்களுக்கு எதிரியே கிடையாது. அ.தி.மு.க. வில் இருக்கும் உறுப்பினர்கள் சுதந்திரமாக செயல்படுகின்றனர். அதற்கு எந்த தடையும் கிடையாது. என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

சட்டப்பேரவையில் நேற்று தமிழக வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு முன்பாக, அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செங்கோட்டையன், சபாநாயகர் அப்பாவுவை அவரது அறையில் தனியாக சந்தித்துப் பேசினார். மேலும், சட்டப் பேரவைக் கூட்டத்துக்கு அவர் வழக்கமாக வருகைதரும் வழியாக இல்லாமல் கடந்த இரு நாட்களாக வேறு நுழைவாயில் பகுதியாக சட்டப்பேரவைக் வருகைகு தந்தார்.

## ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஹோலி ஊர்வலத்தில் மோதல்; கடைகளுக்கு தீ வைப்பால் பதற்றம்

**ராஞ்சி, மார்ச் 16-**

ஜார்க்கண்ட் மாநிலம் கிரிதிஹ் மாவட்டத்தில் நடந்த ஹோலி கொண்டாட்ட ஊர்வலத்தில் இரண்டு சமூகத்துக்கு இடையே ஏற்பட்ட மோதலில் பல வாகனங்கள், கடைகள் தீ வைத்து எரிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கிரிதிஹின் கோத்தம்பா சவுக்கில் உள்ள ஒரு குறுகலான தெரு வழியாக ஹோலி ஊர்லம் சென்ற போது இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டது. இரண்டு சமூகத்தினருக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியது. சுமார் ஒரு மணிநேரம் இந்தக் குழப்பம் நீடித்தது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மாவட்ட எஸ்.பி. டாக்டர் பிமல் கூறுகையில், "கோர்தம்பா தொகுதியில் வெள்ளிக்கிழமை நடந்த ஹோலி கொண்டாட்டத்தின் போது இரண்டு சமூகத்தினரிடையே மோதல் ஏற்பட்டது. இந்தச் மோதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நிலைமை தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது. மோதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை, சில வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார். இதனிடையே, துணை மேம்பாட்டு ஆணையர் ஸ்மிதா குமாரி கூறுகையில், "ஹோலி கொண்டாட்டத்தின் போது, சில சமூக விரோத சக்திகள் சட்ட ஒழுங்கு பிரச்சினையை உண்டாக்க முயன்றுள்ளனர், ஆனால் நிலைமை தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது. எங்களுக்கு கிடைத்த தகவலின் படி, அந்த சமூக விரோத கும்பல் சில வாகனங்களுக்கு தீவைத்துள்ளனர். இந்த சம்பவத்துக்கான காரணத்தை கண்டறிவதற்கு விசாரணை தொடங்கியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

## மகாராஷ்டிரா: ஹோலி கொண்டாடிய சிறுவர்கள் 4 பேர் ஆற்றில் மூழ்கி பலி

**தானே, மார்ச் 16-**

மகாராடிராவில் ஹோலி கொண்டாடிய சிறுவர்கள் 4 பேர் ஆற்றில் மூழ்கி பலியானார்கள்.

மும்பை அருகேயுள்ள தானே மாவட்டத்தின் சம் டோலி பகுதியில் வசிக்கும் 15-16 வயதுள்ள பத்தாம் வகுப்பு மாணவர்கள் 4 பேர் ஹோலி கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஹோலி கொண்டாடி முடித்த பின்னர் குளிப்பதற்காக பத்லாபூர் பகுதியிலுள்ள உலாஸ் ஆற்றில் 4 பேரும் இறங்கியுள்ளனர். அப்போது, ஆற்றில் நீரின் அளவு திடீரென உயர்ந்துள்ளது. இதனால், மாணவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்த நிலையில் 4 பேரும் நீரில் மூழ்கி பலியாகினர். பலியான மாணவர்கள் ஆர்யன் மேதார் (15), ஓம் சிங் தோமர் (15), சித்தார்த் சிங் (16), ஆர்யன் சிங் (16) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். நால்வரின் உடலும் ஆற்றிலிருந்து எடுக்கப்பட்டு மருத்துமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை: ஆந்திர துணை முதல்வர் பவன் பேச்சு

**அமராவதி, மார்ச் 16-**

மொழிக் கொள்கை மற்றும் வடக்கு-தெற்கு மாநிலங்களுக்கு இடையே நிலவும் அரசியல் சார்ந்த சிக்கலுக்கு மத்தியில் இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை என ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் கூறியுள்ளார். காக்கிநாடா மாவட்டம் பிதாபுரம் தொகுதியில் நடைபெற்ற ஜன சேனா கட்சியின் 12-வது ஆண்டு விழாவில் தனது ஆதரவாளர்களுக்கு மத்தியில் அக்கட்சியின் தலைவரான பவன் கல்யாண் பேசி இருந்தார். "இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை. அது தேசத்துக்கு சிறப்பு சேர்க்கும். இது தமிழகத்துக்கும் பொருந்தும். இந்தி மொழியை எதிர்க்கும் தமிழகம், தமிழ் திரைப்படங்களை பிற மொழிகளில் டப்பிங் செய்யக்கூடாது. ஆனால், நிதி ஆதாயத்துக்காக தமிழ் படங்கள் பல மொழிகளில் டப் செய்யப்படுகிறது. சனாதன தர்மம் எனது ரத்தத்தில் கலந்துள்ளது. அதை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. எல்லோருக்கும் மத சுதந்திரம் என்பது உண்டு. நான் இந்து மத பாதுகாவலர்.

மத சுதந்திரம் சார்ந்த விஷயத்தில் ஜன சேனா வாக்கு வங்கி அரசியல் செய்யவில்லை. எந்த மதத்தின் மீது தாக்குதல் நடந்தாலும் அதை கண்டிக்க வேண்டும். தவறு எங்கு நடந்தாலும் அது தவறு தான். தேசத்தை வடக்கு, தெற்கு என பிரிக்கும் துணிவு யாரிடத்திலும் இல்லை. அது மாதிரியான முயற்சிகள் நடந்தால் நிச்சயம் என்னை போன்றவர்கள் அதை தடுக்க முன்வருவோம். நான் சமூக மாற்றத்துக்காக அரசியலுக்கு வந்துள்ளேன்.

பல சவால்களை கடந்து ஜன சேனா இந்த நிலையை எட்டியுள்ளது. 2019-ல் நாம் தோல்வியை தழுவிய போது நம்மை கேலி செய்தனர். நம்மை சட்டப்பேரவையின் வாசலை கூட நெருங்க விட மாட்டோம் என சவால் செய்தனர். இன்று 21 எம்எல்ஏ மற்றும் 2 எம்பி-க்களை நாம் கொண்டுள்ளோம். நமக்கு பயம் கிடையாது." என பவன் கல்யாண் கூறினார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



நெல்லுக்கு ரூ.2,500, கரும்புக்கு ரூ.4,000 குறைந்தபட்ச ஆதார விலை என்ற வாக்குறுதி எல்லாம் வெறும் பேச்சளவிலேயே போய்விட்டது. விவசாயிகளைத் தொடர்ந்து வஞ்சித்து வருவதையே வேலையாக வைத்திருக்கும் திமுக அரசின் இந்த வேளாண் பட்ஜெட், வெறும் காகிதக் குவியலே தவிர வேறொன்றுமில்லை.

- அண்ணாமலை



வருமான வரித் துறை, அமலாக்கத் துறை ஆகியவற்றுடன் கூட்டணி வைத்துக் கொண்டு மக்கள் நலன் சார்ந்த மக்களின் பேராதரவுடன் செயல்படுகிற மு.க.ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சியை சீர்குலைக்க எத்தகைய ஜனநாயக விரோத முயற்சிகள் எடுத்தாலும் அதில் அண்ணாமலை வெற்றி பெற முடியாது.

- செல்வப்பெருந்தகை



தி.மு.க. கடந்த சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் அளித்த விவசாயக் கடன்கள் தள்ளுபடி உள்ளிட்ட வாக்குறுதிகள் நிறைவேறும் வகையில் அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இல்லை. கடந்த 4 முறை வேளாண் பட்ஜெட் போலவே நடப்பு ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருப்பதால் வேளாண் வளர்ச்சிக்கு பயன் தராது.

- ஜி.கே.வாசன்



வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வரும். தமிழகத்தில் பா.ஜ.க.வால் ஜெயலலிதாவின் ஆட்சியை நிச்சயம் தர முடியும். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அதிமுகவும் வர வேண்டும். அ.தி.மு.க.வில் ஓபிஎஸ், சசிகலா இணைந்தாலும், நாங்கள் தனிக்கட்சி தொடங்கியுள்ளதால், தொண்டர்களின் கருத்து கேட்டுத்தான் முடிவு எடுக்கப்படும்.

- டி.டி.வி.தினகரன்

# எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் வரி வசூல் முகாம்

**ஊத்துக்கோட்டை, மார்ச்-16.**

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தமிழக அரசின் ஆணைக்கிணங்க எல்லாபுரம் ஊராட்சியில் 2024 - 2025 ஆண்டிற்கான சொத்து வரி தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் உரிம கட்டணம் உள்ளிட்ட கட்டணம் மற்றும் வரிகளை வசூலிக்க சிறப்பு முகாம் நடைபெறுகிறது. இதில் ஒரு கட்டமாக தாமரைப்பாக்கம் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் பி.ஆதிமூலம் ஏற்பாட்டில் வரி வசூல்கள் மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றது. இதனை வட்டார வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலருமான குமார் மற்றும் வட்டார



வளர்ச்சி அலுவலரும் ஆணையருமான நடராஜன் ஆகியோர் பார்வையிட்டனர். இந்த முகாமில் பணி ஒருங்கிணைப்பாளர் என்.ஞானமூர்த்தி கணிப்பொறி உதவியாளர் ஆர்.சச்சுமா ஆகியோர் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் ஏராளமான வணிகர்கள் பொதுமக்கள் அவர்களது வரிகள் மற்றும் கட்டணங்களை செலுத்தி வருகின்றனர்.

# திருமங்கலம் பகுதியில் செய்வினைவைத்திருப்பதாக கூறி தங்க நகை மற்றும் பணத்தை ஏமாற்றிய பெண் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னை, ஓட்டேரி,பாஷ்யம் 2வது தெருவில் வசித்து வரும் அக்பர், என்பவர் சிக்கன் டெலிவரி செய்யும் வேலை செய்து வருகிறார். அக்பர் திருமங்கலம் வி.ஆர். மால் செல்லும் வழியில் உள்ள குறி சொல்லும் பெண்மணியிடம் தனது எதிர்காலம் குறித்து கேட்டபோது, மேற்படி பெண்மணி உனது மனைவி உனக்கு செய்வினை வைத்துள்ளதாகவும், அதனை தடுக்க பரிகாரம் செய்ய வேண்டும் என்றும் கூறியதன் பேரில், அக்பர் சிறிது சிறிதாக என மொத்தம் ரூ.40,000/- பணமும், 1.5 சவரன் எடை கொண்ட 2 மோதிரங்கள், 1 ஜோடி கம்மல் ஆகிய தங்க நகைகளும், 1 ஜோடி வெள்ளி கொலுசையும் கொடுத்துள்ளார்.

மேற்படி பெண்மணி அதனை ஒரு டப்பாவில் போட்டு மந்திரம் செய்து கொடுத்து நான்சொல்லும்போதுதான் திறந்து பார்க்க வேண்டும் எனக்கூறி டப்பாவை கொடுத்து அனுப்பிய பிறகு, அக்பர் மேற்படி டப்பாவை திறந்து பார்த்தபோது, அதில் தங்க நகைகள் மற்றும் வெள்ளி கொலுசு இல்லாமல் மேற்படி பெண்மணி ஏமாற்றியது தெரியவந்தது. இது குறித்து அக்பர் திருமங்கலம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் மோசடி பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி மோசடியில் ஈடுபட்ட விஜயலட்சுமி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் பணம் ரூ.25,000/-, 1.5 சவரன் எடை கொண்ட 2 மோதிரங்கள், 1 ஜோடி கம்மல் ஆகிய தங்க நகைகள் மற்றும் 1 ஜோடி வெள்ளி கொலுசு ஆகியவை மீட்கப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி விஜயலட்சுமி, விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# சென்னையில் குட்கா புகையிலை பொருட்கள் வைத்திருந்த 4 பேர் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னை பெருநகர காவல், திரு.வி.க நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் கடந்த 12 ந் தேதி மதியம், திரு.வி.க நகர், இ.எஸ்.ஐ. மருத்துவமனை சாலையில் கண்காணித்தனர், அங்கு சட்டவிரோத விற்பனைக்காக குட்கா புகையிலை பொருட்களை வைத்திருந்த உதயகுமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 28.7 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், கூலிப், விமல், ஜர்தா உள்ளிட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகள் மற்றும் 2 கிலோ எடை கொண்ட மாவா பாக்கெட்டுகள், மாவா தயாரிக்க பயன்படுத்திய 1 மிக்சி, 3 ஜார், 1 எடை இயந்திரம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட உதயகுமார் மீது ஏற்கனவே 3 குட்கா வழக்குகள் உட்பட 4 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி உதயகுமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

இதே போல, தலைமைச்செயலக குடியிருப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் எஸ்.எஸ்.புரம், பிரிக்ளின் ரோடு சந்திப்பு அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மாவா வைத்திருந்த ஆனந்த், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1.720 கிலோ கிராம் மாவா பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட ஆனந்த் மீது பெண் வன்கொடுமை குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி ஆனந்த் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.இதே போல, மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் மயிலாப்பூர், அப்பு தெருவிலுள்ள ஒரு பெட்டிக்கடையை கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக ஹான்ஸ் புகையிலை பாக்கெட்டுகளை பதுக்கி வைத்து ரகசியமாக விற்பனை செய்து கொண்டிருந்த மணி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 200 கிராம் எடை கொண்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி மணி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.மேலும், யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் சவுகார்பேட்டை, முத்தையா தெரு அருகே சட்டவிரோத விற்பனைக்காக ஹான்ஸ் வைத்திருந்த ஜியாலால், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 80 கிராம் எடை கொண்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.இது தொடர்பாக யானைகவுனி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு எதிரி ஜியாலால் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# கொளத்தூர் பகுதியில் செல்போன் பறிப்பில் ஈடுபட்ட வடமாநில நபர் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னை, கொளத்தூர், ஜிகேஎம். காலனி, 33வது தெருவில் வசித்து வரும் லோகேஷ், என்பவர் 25.ந் தேதி அன்று வெளியில் சென்றிருந்தபோது, தனது சட்டைப்பையில் வைத்திருந்த செல்போனை காணவில்லை என கொளத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 15.12.2024 அன்று இரவு கொளத்தூர், அவ்வை நகர் 2வது தெருவில் வசித்து வரும் வடமாநிலத்தைச் சேர்ந்த குட்டு குமார் என்பவர் வில்லிவாக்கம், மேயர் சிட்டி பாபு பாலம் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவர் குட்டு குமார் கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார். இது குறித்து குட்டுகுமாரின் வீட்டு உரிமையாளர் கொளத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கொளத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பு வழக்கில் தொடர்புடைய பரமேஷ்வர் பாவ்ரே, வ/என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து லோகேஷின் செல்போன் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி பரமேஷ்வர் பாவ்ரே சுமார் 8 வருடங்களாக சென்னையில் தங்கி கட்டுமானம் நடைபெறும் இடங்களில் கொத்தனார் வேலை செய்து அங்கேயே தங்கி வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பரமேஷ்வர் பாவ்ரே விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# மெட்ரோ பணி காரணமாக ஐ.சி.எப் பகுதியில் போக்குவரத்து மாற்றம்

**சென்னை மார்ச் 16-**

மெட்ரோ பணிகள் நடைபெறுவதால் ஐ.சி.எப் பகுதியில் இன்று முதல் போக்குவரத்து மாற்றம் செய்து, காவல் துறை அறிவித்துள்ளது. இது குறித்து போக்குவரத்து காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை மெட்ரோ பணி நடைபெற்று வருவதால் வில்லிவாக்கம் மாநகர பேருந்து நிலையம் ஐ.சி.எப் அருகில் ஏற்கனவே போக்குவரத்து மாற்றப்பட்டுள்ளது. இந்நிலையில், இன்று காலை 10 மணி முதல் ரெட்டி தெரு மற்றும் தெற்கு மாடவீதி ஆகிய 2 வீதிகளுக்கு வரும் வாகனங்கள் தடைசெய்யப்பட்டு பாதசாரிகள் மட்டும் செல்ல வழி வகை செய்யப்படும்.பாடி மேம்பாலத்திலிருந்து வரும் வாகனங்கள் எம்டிஎச் ரோடு, சிவன் கோயில் தெரு சந்திப்பில் இடதுபுறம் திரும்பி சிவன் கோயில் தெற்கு மாடவீதி, பாலி அம்மன் கோயில் தெரு வலதுபுறம் திரும்பி பெருமாள் கோயில் வடக்கு தெரு மற்றும் மேட்டு தெரு வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம். ஐ.சி.எப் சந்திப்பிலிருந்து வரும் வாகனங்கள் எம்டிஎச் ரோடு, சிவன் கோயில் தெரு சந்திப்பில் வலதுபுறம் திரும்பி சிவன் கோயில் மேற்கு மாடவீதி, பாலி அம்மன் கோயில் தெரு வழியாக பெருமாள் கோயில் வடக்கு மாடவீதி வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாதவரம் பகுதியில் மெத்தம்பெட்டமைன் வைத்திருந்த வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னை பெருநகர காவல், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தனிப்படையினர் மற்றும் மாதவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து கடந்த 11 ந் தேதிஅன்று மாதவரம் பேருந்து நிலையம், டிரக் டெர்மினல் அருகே கண்காணித்து, அங்கு மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளை கைமாற்றுவதற்காக வைத்திருந்த 1.அஜய், , 2.ராகுல், 3.சதீஷ்குமார், 4.முத்துராஜன், 5.நிஸ்டல், , 6.சமீம் பிர்தௌஸ், 7.புருஷோத்தமன், ஆகிய 7 பேரை கைது செய்து, அவர்களிடமிருந்து 07 கிராம் மெத்தம்பெட்டமைன், 80 கிராம் OG கஞ்சா மற்றும் 8 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டு, கடந்த 11 ந் தேதி அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் தலைமறைவு எதிரிகளை தனிப்படையினர் தீவிரமாக தேடி வந்தனர்தனிப்படையினர் மற்றும்மாதவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து தீவிர தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி வழக்கில் தொடர்புடைய ஷாகுல், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி ஷாகுல் வடபழனி பகுதியில் உள்ள ஒரு ஜூஸ் கடையில் வேலை செய்து வருவது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி ஷாகுல் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.



**சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்று வரும் மதி இயற்கை சந்தையினை பார்வையிட்டு மகளிர் சுய உதவிகுழுவினருடன் தலைமை செயலாளர் முருகானந்தம் கலந்துரையாடினார். இதில் ஊராட்சி துறை கூடுதல் தலைமை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் ஸ்ரேயா பி.சிங் கலந்து கொண்டனர்.**

# மயிலாப்பூர் பகுதியில் டீ வியாபாரி மீது தாக்குதல்: 3 பேர் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னை, தேனாம்பேட்டை, நளான் தெருவில் வசித்து வரும் S.சதீஷ்குமார், என்பவர் கடந்த 11.ந் தேதி அன்று அதிகாலை, ஆழ்வார்பேட்டை மேம்பாலம் கீழே உள்ள தனியார் மருத்துவமனை அருகே கைக்கிளில் டீ விற்கும் நபரிடம் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, சதீஷ்குமாருக்கும் டீ விற்பனை செய்யும் நபருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்பொழுது அங்கு டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த 3 பேர் சதீஷ்குமாரிடம், டீ விற்கும் நபரிடம் ஏன் தகராறு செய்கிறீர்கள் எனக் கூறி சென்றுவிட்டு. சிறிது நேரம் கழித்து 3 நபர்களும் இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து சதீஷ்குமாரை தகாத வார்த்தைகளால் பேசி, தலைக்கவசம் மற்றும் கைகளால் தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர். இது குறித்து சதீஷ்குமார் மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.ஆர்.சதீஷ்குமார், 2.அஜித்குமார், 3.அரவிந்த், ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி அரவிந்த் மீது ஏற்கனவே அபிராமபுரம் காவல் நிலையத்தில் ஒரு அடிதடி வழக்கு உள்ளது தெரியவந்தது.

மேலும், விசாரணையில் எதிரிகள் ஆர்.சதீஷ்குமார் மற்றும் அஜித்குமார் ஆகியோர் தனியார் நிறுவனத்திலும், மற்றொரு எதிரி அரவிந்த் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்காலிகமாக கொசு மருந்து அடிக்கும் வேலை செய்து வருவதும் தெரியவந்தது.


கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற வகுப்பு மாணவர்களுக்கு அகில இந்திய நுழைவுத் தேர்வு பயிற்சி: தாட்கோ இயக்குனர் தகவல்

**சென்னை மார்ச் 16-**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற வகுப்பினர் மாணவர்கள் அகில இந்திய நுழைவுத் தேர்வில் (ஜேஇஇ முதன்மைத் தேர்வு) கலந்து கொள்ள பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.இது குறித்து வெளியிடுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு அகில இந்திய நுழைவுத் தேர்வில் (ஜேஇஇ முதன்மைத் தேர்வு) தேர்ச்சி பெற பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியினை பெற பன்னிரெண்டாம் வகுப்பில் இயற்பியல், வேதியியல் மற்றும் கணக்கு பாடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த மாணவர்கள் 65 சதவீதமும் மற்றும் பிற இனத்தைச் சார்ந்த மாணவர்கள் 75 சதவீதம் மதிப்பெண் பெற்றியிருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.4 லட்சத்திற்குள் இருக்கவேண்டும். இப்பயிற்சியானது மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி பெற தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்யவும் மேலும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் நடத்தும் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும் சென்னை மாவட்டத்தில் உள்ள மணலி, சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் பாலிடெக்னிக் கல்லூரியில் தங்கி பயிலவும் உணவு மற்றும் தங்கும் இடத்திற்குக் கான கட்டணத் தொகையும் 11 மாதங்களுக்கு தங்கி பயில பயிற்சிக்கான தொகையினை சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் மேலும் கடந்த ஆண்டில் 30 மாணவர்கள் தங்கி பயின்று அதில் 26 மாணவர்கள் தேர்ச்சி பெற்று ஐஐடி, என்ஐடி போன்ற தேசிய கல்வி நிறுவனங்களில் சேர தகுதி பெற்றுவுள்ளார்கள் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**



**வளசரவாக்கம் மண்டல அலுவலகத்தில் மீண்டும் மஞ்சப் பை தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரத்தை மக்கள் பயன்பாட்டிற்கு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணி மாதவன், சாந்தி ராமலிங்கம், வி.வி. கிரிதரன், வட்ட செயலாளர்கள் அ.மோசஸ், எம்.ரூபன் மற்றும் பலர் உள்ளனர்.**

# பணத்துக்காக நகை கடை உரிமையாளரை கடத்தி கொலை செய்ய முயன்ற 3 பேர் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னை வேளச்சேரியில் பணத்துக்காக நகை கடை உரிமையாளரை கடத்தி கொலை செய்ய முயன்ற 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நகை கடை உரிமையாளரை கடத்த முயன்ற வினோத், பாலமுருகன், அழகுமலை, லோகநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வளசரவாக்கத்தில் பெண் மருத்துவருக்கு கத்திக்குத்து: ஒருவர் கைது

**சென்னை மார்ச் 16-**

சென்னைவளசரவாக்கத்தில் பெண் மருத்துவர் வீட்டில் தனியாக இருந்த நிலையில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட நபர் கத்தியால் குத்தி தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். ஆன்லைனில் ஆர்டர் செய்த மருந்தை விற்பனை செய்வது போல் நாடகமாடி பெண் மருத்துவரிடம் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.இந்த சம்பவம் தொடர்பாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பந்தப்பட்ட நபரை தேடி வந்தனர்.இந்நிலையில், பெண் மருத்துவரை கத்தியால் குத்தி கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட ராமாபுரம் பகுதியை சேர்ந்த நாகமுகத்து கைது செய்யப்பட்டுள்ளார்.மேலும், அவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டதை அடுத்து, சிறையில் அடைக்கப்பட்டார்.

# பெண்கள் விடுதியில் தங்க சங்கிலிகளை திருடிய பெண் கைது

**. சென்னை மார்ச் 16-**

சென்னை, வடபழனி,ஆற்காடுசாலையிலுள்ளதனியார் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து கொண்டு லட்சுமிப்பிரியா, என்பவர் , அதே பகுதியிலுள்ள அழகர் பெருமாள் கோயில் தெருவிலுள்ள பெண்கள் தங்கும் விடுதியில் தங்கி வருகிறார். லட்சுமிப்பிரியாவும், இவருடன் அதே மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வரும் ரம்யா என்பவரும் 11 ந் தேதி அன்று மருத்துவமனையில் இரவு பணிமுடித்து மறு நாள் காலை லட்சுமிப்பிரியாவின் பெண்கள் தங்கும் விடுதியில் இருவரும் தூங்கினர். மாலை லட்சுமிப்பிரியா எழுந்து பார்த்தபோது, ரம்யா அங்கிருந்து சென்றுவிட்ட நிலையில், லட்சுமிப்பிரியா தான் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 4 சவரன் எடை கொண்ட தங்க தாலிச்சங்கிலியை காணவில்லை என்றும், இதே போல கடந்த 8 ந் தேதி அன்று மேற்படி விடுதியில் தங்கியிருந்த சுஷ்மிதா என்ற செவிலியரின் 1 சவரன் தங்கச்சங்கிலியும் காணவில்லை என்றும், லட்சுமிப்பிரியா வடபழனி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.வடபழனி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி தங்கச்சங்கிலிகளை திருடியது லட்சுமிப்பிரியாவுடன் வேலை செய்து வந்து சம்பவத்தன்று அவருடன் தங்கியிருந்த செவிலியர் ரம்யா எனத் தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் மேற்படி வழக்கில் தொடர்புடைய எதிரி ரம்யா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் தங்க தாலிச்சங்கிலி உட்பட மொத்தம் சுமார் 5 சவரன் எடை கொண்ட இரண்டு தங்கச்சங்கிலிகள் மீட்கப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி ரம்யா விசாரணைக்குபின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# மாதர்பக்கம் அரசு பள்ளியில் மின்சாரம் பற்றிய விழிப்புணர்வு

**கும்மிடிப்பூண்டி, மார்ச்.15-**

கும்மிடிப்பூண்டி அடுத்த மாதர்பாக்கம் ஊராட்சியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் மின்சார பாதுகாப்பு விழிப்புணர் கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஒபிஜி. பிருதிவிவரதன் முன்னிலை வகித்தனர் உதவி பொறியாளர் கண்ணன் வரவேற்றனர். கூட்டத்திற்கு செயற்பொறியாளர் பாண்டியன் தலைமை தாங்கி மாணவர்களிடையே சிறப்பு உரையாற்றினார். மாணவர்களிடையே பேசுகையில் இன்றைய தலைமுறை மாணவர்களுக்கு மின்சாரம் எளிதில் கிடைத்து விடுகிறது நாங்கள் எல்லாம் மின்சாரம் இல்லாமல் படித்தோம் ஆனால் இன்றைய மாணவர்கள் மின்சாரம் எளிதில் கிடைத்ததை தேவை இல்லாததற்கும் விளையாடு சம்மந்தமாக பயன்படுத்துகிறார்கள். அதே சமயம் மின்சாரம் பற்றி விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார்கள் முதலிலே கைபேசிக்கு சார்ஜர் செலுத்துவதை முறையாக செலுத்த வேண்டும் பின்னர் குளித்த பின்னர் உடனே மின்சாரத்தில் கை வைப்பது அல்லது விளையாட்டு பொருட்களை மின்சாரத்தில் செலுத்துவதோ இது போன்று எதுவும் நிகழாத அளவிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். பின்னர் மின்சாரம் உற்பத்தியை பற்றி எடுத்துரைத்தனர். கூட்டம் முடிவில் உதவி பொறியாளர்கள் சரவணன் சுரேஷ் ஆகியோர் நன்றி கூறினர்.

# சிதம்பரம் நடராஜர் கோயில் தொடர்பாக தீட்சதர்கள் மனு தள்ளுபடி சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை,மார்ச்.16

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலில் உள்ள கனகசபை மண்டபத்தில் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து அருள்மிகு சபாநாயகரை (நடராஜர்) தரிசிப்பது தொன்று தொட்டு வழக்கத்தில் உள்ள நடைமுறையாகும்.கோவிட் -19 நோய் பெருந்தொற்று காரணமாக அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி திருக்கோயில்களில் பக்தர்கள் வருகைக்கு கட்டுபாடுகள் விதிக்கப்பட்டு, பிறகு கொரோனா பெருந்தொற்று குறைந்த நிலையில் திருக்கோயில்களில் பக்தர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுபாடுகள் விலக்கப்பட்டு, படிப்படியே ஏற்கனவே பின்பற்றி வந்த வழிபாட்டு நடைமுறைகள் கடைபிடிக்கப்பட்டது.

**வழக்கு**

2020 ஆம் ஆண்டு முதல் கனகசபை மீது ஏறி பக்தர்கள் வழிபட தடையிருந்த நிலையில், 17.05.2022 தேதியிட்ட அரசு பிறப்பித்த அரசாணை காரணமாக பக்தர்கள் கனகசபை மீது ஏறி சுவாமி தரிசனம் செய்தனர். இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு ஆனி திருமஞ்சன திருவிழா மற்றும் மார்கழி திருவாதிரை திருவிழாவின் போது விழாவினை காரணங்காட்டி கனகசபை மீது பக்தர்கள் ஏறி வழிபட தலா நான்கு நாட்கள் தடை செய்தனர். அரசாணையை மீறி நான்கு நாட்களுக்கு கனகசபை மீது ஏறி வழிபட அனுமதியில்லை என கூறி அரசாணையை செயல்படுத்தாத தீட்சிதர்கள் மீது 6 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய கோரி பொது தீட்சிதர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். மேற்படி வழக்கு நீதியரசர்ஜி. கே.இளந்திரையன் முன்னிலையில் விசாரணைக்கு வரபெற்று, நீதியரசர் வழக்கை ரத்து செய்ய மறுத்து பொது தீட்சிதர்கள் முறையீட்டை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர் காட்சியை முன்னிட்டு மலர் நாற்றுகள் நடும் பணி

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்



ஊட்டி, மார்ச்.16-

நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வரும் 2025 மே மாதம் நடைபெற இருக்கும் 127வது மலர் காட்சியை முன்னிட்டு இன்காமேரிகோல்டு, பிரன்ச் மேரிகோல்டு போன்ற மலர் நாற்றுகள் நடும் பணியினை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று துவக்கி வைத்தார். பின்னர் கலெக்டர் தெரிவித்தாவது:-

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வரும் 2025 மே மாதம் நடைபெற இருக்கும் 127வது மலர் காட்சியை முன்னிட்டு பூங்காவின் பல்வேறு பகுதிகளில் மலர் பாத்திகள் அமைத்து, பல வண்ண மலர்ச் செடிகள் நடவு செய்ய விரிவான ஏற்பாடுகள் தோட்டக்கலைத்துறையின் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு, இன்காமேரிகோல்டு, பிரன்ச் மேரிகோல்டு போன்ற மலர் நாற்றுகள் நடும் பணியினை இன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வாண்டு சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஜெரேனியம், சைக்லமன், பால்சம் மற்றும் பல புதிய இரக ஆர்னமெண்டல்கேல், ஓரியண்டல்லில்லி, ஆசியாடிக்லில்லி, டேலியாக்கள் மற்றும் பிகோனியா, கேன்டீடப்ட், பிரன்ச் மேரிகோல்டு, பேன்சி, பெட்டுனியா, பிளாக்ஸ், ஜினியா, ஸ்டாக், வெர்பினா, சன்பிளவர், சிலோசியா, ஆன்டிரைனம், டயான்தஸ், ஆஸ்டர், ஜெர்பரா, க்ரைசாந்திமம், டெல்பினியம், சால்வியா, ஆந்தூரியம் போன்ற 275 வகையான விதைகள் மற்றும் செடிகள் ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்டு மலர்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில் 7.5 இலட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

நடவு செய்யப்படும் மலர் நாற்றுகளுக்கு பனியின் தாக்கம் ஏற்படாத வண்ணம் கோத்தகிரி மிலார் செடிகளைக் கொண்டு பாதுகாப்பு செய்யப்படும். இவ்வாண்டு எதிர்வரும் மலர்க் காட்சியினையொட்டி மலர்க்காட்சி மாடம் மற்றும் கண்ணாடி மாளிகையில் 40,000 வண்ண மலர்த் தொட்டிச் செடிகள் அடுக்கி வைக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றார். இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதிஸ், உதவி இயக்குநர்கள் பைசல் (உதகை தாவரவியல் பூங்கா), விஜியலட்சுமி (குன்னூர் சிம் பூங்கா), ஐஸ்வர்யா (கோத்தகிரி நேரு பூங்கா), ஜெயந்தி (நடவு பொருட்கள்), தோட்டக் கலைத்துறை அலுவலர்கள் மற்றும் தோட்டப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா வழங்கினார்



ஈரோடு.மார்ச்.16-

ஈரோடு மாவட்டம், இரங்கம்பாளையம் ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், ஈரோடு மாவட்ட நிருவாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கலெக்டர் தெரிவிக்கையில், ஈரோடு மாவட்ட நிருவாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் இன்றைய தினம் (15.03.2025) நடத்தப்பட்டுள்ளது. இம்முகாமானது காலை 8.00 மணிக்கு துவங்கி மாலை 3.00 மணி வரை தொடர்ந்து நடைபெறுகிறது. இம்முகாமில் 220-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்றுள்ளனர். மேலும் இம்முகாமில் தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் குறிப்பாக நான் முதல்வன் திட்டம் சிறப்பாக செயல்பட்டுத்தப்பட்டு வருகிறது. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பாலிடெக்னிக் மற்றும் தொழில்துறை பயிற்சி நிலைய மாணவர்களுக்கு மெஷினிங் திறன் பயிற்சி வழங்கும் பெருந்துறையில் அமைந்துள்ள நிறுவனத்தில் இயந்திரம் மூலம் ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் தயாரிக்கும் பயிற்சியினை சேலம் அரசு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த, மாணவ, மாணவர்கள் பெற்று வருகின்றனர். இதுபோன்ற திறன் பயிற்ச்சிகள் மாணவ, மாணவியர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும். அதேபோல ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையத்தின் மூலம் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சிகள் வகுப்புகள் வருகிறது. இப்பயிற்சி வகுப்பில் பயின்ற பல்வேறு நபர்கள் அரசு துறைகளில் பணிநியமன செய்யப்பட்டுள்ளனர். எனவே படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இதுபோன்ற முகாம்களில் பங்கேற்று, தனியார் நிறுவனங்களில் வேலை பார்த்து கொண்டே போட்டித் தேர்வுகளுக்கு தயாராகலாம். மேலும் இதன் மூலம் உங்களுக்கு முன் அனுபவம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது.

மேலும் இம்முகாம்களில் நீங்கள் பங்கேற்பது மட்டுமல்லாமல், உங்களது நண்பர்களையும் பங்கேற்க செய்ய உறுதுணையாக வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டத்தில் 3 தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் சொந்த மாவட்டத்தில் மட்டுமல்லாமல், இதர மாவட்டங்களிலும் பணிக்கு செல்ல ஆர்வம் காட்ட வேண்டும். எந்த வேலையாக இருந்தாலும் அதனை தொடர்ந்து ஒரு வருட காலமாவது மேற்கொள்ளும் பொழுது தான், அப்பணியை நம்மால் கற்றுக் கொள்ள இயலும். எனவே தமிழ்நாடு அரசின் மூலம் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களை வேலைவாய்ப்பற்ற இளைஞர் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார். இம்முகாமில் கலெக்டர் வேலைவாய்ப்பு மட்டும் தொழில் நெறி வழிகாட்டு மையத்தில் பயின்று தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி 4 தேர்வில் தேர்வு பெற்ற 10 பணியாளர்களை பாராட்டி கேடயம் வழங்கினார். மேலும், முகாமில் அதிக வேலை நாடுநர்களை தேர்வு செய்த சக்தி சுகர்;ஸ் மற்றும் ஈக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் ஆகிய நிறுவனங்கள், சமூக வலைதளத்தின் வாயிலாக மக்களிடம் கொண்டு செல்ல உறுதுணையாக இருந்த ஈரோடு ஸ்மார்ட் சிட்டி சமூக வலைதள பக்கம் நிர்வாகி நவீன் அவர்களுக்கும், கடந்தாண்டு நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமனம் பெற்று தற்போது வேலை அளிப்பவராக கலந்து கொண்டுள்ள கலையரசன் அவர்களையும் பாராட்டி கேடங்களை வழங்கினார். மேலும், பர்கூர் பகுதியில் நடைபெற்ற மனுநீதி முகாமில் வேலைவாய்ப்பு வேண்டி கோரிக்கை மனு அளித்த அபிநயன் என்பவருக்கு கலெக்டர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் சத்தியமங்கலம், ஏர்டெல் நிறுவனத்தில் பணிபுரிய தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கலெக்டர் நியமன ஆணையினை வழங்கினார். இன்றைய தினம் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 1928 ஆண்களும் 1385 பெண்களும் 36 மாற்றுத்திறனாளிகளும் என மொத்தம் 3349 வேலைநாடுநர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 372 ஆண்களும், 344 பெண்கள், 12 மாற்றுத்திறனாளிகள் என 728 நபர்கள் இன்று நடைபெற்ற முகாமில் பணி நியமனம் பெற்றுள்ளனர். இந்நிகழ்வின்போது, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு, கோவை) ஆ.ஜோ தி ம ணி, உதவி இயக்குநர் (மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்) ரா.ராதிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொ.வ) டி.டி.சாந்தி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் கா.து.கவிதா, கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயக்குநர் வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாநில அளவிலான போட்டி: கொங்கு கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் சாதனை




ஈரோடு, மார்ச் 16:

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் ஆடை வடிவமைப்பு மற்றும் கவின் புனைவியல் துறை மாணவ-மாணவிகள் நடப்பு கல்வியாண்டில் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இதில், அலங்கார ஆடை அணிவகுப்பு போட்டி, ஆர்ட் ஃபர்ம் வேஸ்ட், நெயில் ஆர்ட், பேஷன் இல்லஸ்டிரேஷன், டிசைனர் கான்டஸ்ட் போன்ற போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர்.

குறிப்பாக கேஎஸ்ஆர் மகளிர் கலை அறிவியல் கல்லூரி, காமதேனு கலை அறிவியல் கல்லூரி, ஸ்ரீ விவேகானந்த கலை அறிவியல் கல்லூரி, பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரி, பார்க்ஸ் கலை அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தையும் வென்று, பரிசு தொகையாக ரூ.94 ஆயிரத்தையும் பெற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளை கல்லூரியின் தாளாளர் பி.டி.தங்கவேல், கல்லூரியின் முதல்வர் வாசுதேவன், ஆடை வடிவமைப்பு துறை தலைவர் மஞ்சுளா ஆகியோர் பாராட்டி கவுரவித்தனர்.

# சர்வதேச திறன் மேம்பாட்டு அமைப்புடன் கோத்தகிரி ஜூட்ஸ் பள்ளி புரிந்துணர்வு ஒப்பந்தம்

## இந்தியாவின் முதல் பள்ளி என்ற சிறப்பினை பெற்றுள்ளது




ஊட்டி, மார்ச்.16-

சர்வதேச திறன் மே;மபாட்டு அமைப்புடன் கோத்தகிரி ஜூட்ஸ் பள்ளி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதையடுத்து இந்தியாவின் முதல் பள்ளி என்ற சிறப்பினை பெற்றுள்ளது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் செயின்ட் ஜூட்ஸ் பள்ளியானது சர்வதேச படைப்பாற்றல் திறன்

மேம்பாட்டு அமைப்புடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதல் பள்ளியாகும். இதன் மூலம் உலக அரங்கில் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இங்கு பயிலும் மாணவர்களின் சிந்தனைத்திறன் மற்றும் படைப்பாற்றல, தொழில்நுட்ப திறன் போன்றவற்றில் சிறந்து விளங்க மாணவர்களை தயார்படுத்துகிறது. இங்கு பயிலும் மாணவர்கள் உலகப்பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றில் எழும் சிக்கல்களை தீர்க்கவும்; முடியும். மேலும் மாணவர்களின் திறன்களை கண்டறிந்து எங்கள் அமைப்பு முன்னெடுத்து செல்லும் பயிற்சி பட்டறைகளின் மூலம் அவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து பல்வேறு துறைகளில் நிபுணர்களாக உருவாக்கப்படுவார்கள்.

ஜூட்ஸ் பள்ளி அரங்கில் நடைபெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சர்வதேச படைப்பாற்றல் மற்றும் திறன் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் பிலிப் தாமஸ், ஜூட்ஸ் பள்ளியின் செயல் இயக்குநர் சம்ஜித் தன்ராஜன் முன்னிலையில் முதல்வர் சரோ தன்ராஜன் ஆகியோர் கையெழுத்திட்டனர். அப்போது பேசிய தலைவர் பிலிப் தாமஸ் கட்டமைக்கப்பட்ட சிந்தனை மற்றும் நவீன தொழில்நுட்பங்களை மாணவர்களின் கற்றலோடு இணைக்கும் போது எதிர்காலத்தில் மாணவர்கள் சிறந்த படைப்பாளர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், தலைவராகவும், தொழில்நுட்ப வல்லுநர்களாகவும் திகழ நாங்கள் தயார் படுத்துகிறோம். எங்களது திட்டத்தில் இணைந்ததன் மூலம் ஜூட்ஸ் பள்ளியானது கல்வியில் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது என்றார்.

பள்ளியின் முதல்வர் டாக்டர் சரோ தன்ராஜன் பேசும்போது, இந்த திட்டத்தை எங்கள் பள்ளியில் செயல்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதனால் ஜூட்ஸ் பள்ளி மாணவர்களின் கல்வியும், படைப்பாற்றல் திறனும் சேர்ந்தே வளரும் என்பதை நம்புகிறோம். இந்த திட்டத்தில் நாங்கள் இணைந்து செயலாற்றுவதன் மூலம் எதிர்கால தலைவர்களுக்கான அதிகாரத்தை அளிக்கும் என்பதை நாங்கள் நம்புகிறோம் என்றார். பள்ளியின் நிர்வாக இயக்குநர் சம்ஜித் தன்ராஜன் பேசும்போது- சர்வதேச திறன் மே;பாட்டு அமைப்பின் திட்டத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தும் முதல் பள்ளியாக எங்கள் ஜூட்ஸ் பள்ளி இருப்பதில் பெருமை கொள்கிறோம், எதிர்காலத்தில் எங்கள் மாணவர்களை உலகத்தரம் வாய்ந்த தலைவர்களாக தயார்படுத்துவதே எங்கள் நோக்கம் என்றார்.

இவ்விழாவில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சாகர் சர்வதேசப் பள்ளியின் ஆரம்ப வகுப்புகளுக்கான கண்காட்சி



ஈரோடு மார்ச் 16-

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள சாகர் சர்வதேசப் பள்ளியில் ஆரம்ப வகுப்புகளுக்கான (KG toll std) கண்காட்சி தொடங்கியது.

இக்கண்காட்சியில் பள்ளியின் தாளாளர் அரிமா சி. சௌந்திரராஜன் குத்துவிளக்கேற்றியும், ஒன்றாம் வகுப்பு மாணவிகள் இறைவணக்கம் பாடியும் துவக்கிவைத்தனர். முதல்வர் .பி ஆர் சீஜா, கல்வி இயக்குநர் சுரேந்திர ரெட்டி, ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் திறளாகக் கலந்துக் கொண்டனர். இது குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் உடல், உள்ளம், ஆன்மா, சமூகம் சார்ந்த அனைத்துத் திறன்களின் வளர்ச்சிக்கும் பயன்படும் வகையில் மிகச் சிறப்பாக நடந்தது. இந்நிகழ்ச்சியில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த பள்ளியளித்த வாய்ப்புகளில் கலந்து கொண்டு வெற்றிகண்ட பெற்றோர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

# நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் 17வது விளையாட்டு விழா

ஈரோடு மார்ச் 16-

ஈரோடு நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் 17வது விளையாட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் .வி.சண்முகன் தலைமை வகித்தார்.

மேலும் விழாவில் இந்திய கைப்பந்து அணி வீரர் . எம். நவீன் ராஜா ஜேகப் சிறப்பு விருந்தினராக பங்கேற்று விளையாட்டு விழாவினை கொடியேற்றி தொடக்கி வைத்தார். ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி மற்றும் முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ்.ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக கல்லூரியின் முதல்வர் முனைவர். எஸ். நந்தகோபால் வரவேற்புரை வழங்கினார். பின்னர், கல்லூரியின் உடற்பயிற்சி பேராசிரியர் வி.என். பாஸ்கரன் ஆண்டறிக்கையினை வாசித்தார். தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ. மாணவிகளுக்கு இந்திய கைப்பந்து அணி வீரர் எம். நவீன் ராஜா ஜேகப் பரிசுகளை வழங்கி பேசினார், இதனைத் தொடர்ந்து நடைபெற்ற சிலம்பம் மற்றும் கராத்தேவில் தனித்தனியாக மாணவ- மாணவியர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டினார்கள். பின்னர், துறைகள் வாரியாக பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைத் தக்க வைத்துக் கொண்டதன் அடிப்படையில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் கணினி மற்றும் அறிவியல் பொறியியல் துறையினரே வென்றது. குறிப்பிடத்தக்கது மேலும், இரண்டாம் இடத்தினை ஆண்கள் பிரிவில் தகவல் தொழில்நுட்ப துறையினரும். பெண்கள் பிரிவில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையினரும் வென்றார்கள். கல்லூரி ஊழியர்கள். மற்றும் மாணவர்களை கல்லூரி நிர்வாகத்தினர் பாராட்டினார்கள்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter.I, O.J.Christhu Raj, Son of O.S.Joseph, Age-40, permanently residing at, Address 219A, Madha Kovil Street, Erayamangalam Village and Post, Erayamangalam, Thiruvallur, TamilNadu - 631402.Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus , Chennai - 104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.

O. J.Christhu Raj

**IN THE COURT OF III SMALL CAUSES COURT AT CHENNAI**
**M.C.O.P.NO. 4939 OF 2024**

Mohammed Nasir ...Petitioner

-Vs-

1. The Managing Director MTC Chennai
2. Sakthivel

...Respondents

To
Sakthivel S/o Parthasarathy,
No.1/73A, Mariamman Kovil Street
Pallikulam Gingee Taluk,
Villupuram-604203.

2 Respondents

Take notice that the above claim petition came up on 14.03.2025 before the Hon'ble III Small Causes for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 25.04.2025. Ensure your presence before the said court on 25.04.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.

P. MURUGESAN
Counsel for Petitioner

**IN THE COURT OF III SMALL CAUSES COURT AT CHENNAI**
**M.C.O.P.NO. 4497 OF 2024**

Dinesh ....Petitioner

-Vs-

1. Murugan
2. SBI General Insurance Co Ltd Chennai.

...Respondents

To
Murugan S/o Mannu Gounder
No.19 (A-5), 4th Street Lazar Nagar
Kamaraj Nagar Avadi,
Chennai-600071

1 Respondents

Take notice that the above claim petition came up on 10.03.2025 before the Hon'ble III Small Causes for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 21.04.2025. Ensure your presence before the said court on 21.04.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.

P. MURUGESAN
Counsel for Petitioner

**IN THE COURT OF SMALL CAUSES II COURT AT CHENNAI**
**M.C.O.P.NO. 3429 OF 2023**

Vivek ....Petitioner

-Vs-

1. Ramachandiran,
2. New India Assurance Co, Ltd., Chennai.

....Respondents

To
1.Ramachandiran
Son of Arumugam,
No.20/A, Ramdass Nagar,
Narasinganallur,
Thorapadi Chengam Taluk,
Thiruvannamalai-606704

1 Respondent

Take notice that the above claim petition came up on 18.02.2025 before the Hon'ble II Small Causes for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 19.03.2025. Ensure your presence before the said court on 19.03.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.

P. MURUGESAN
Counsel for Petitioner

**முதன்மை சார்பு நீதிமன்றம்**
**திண்டுக்கல்**
**I.A.No. 3/2023**
**O.S.No. 473/2013**

திருமதி.M.நபீசா பீவி ....... மனுதாரர் /வாதி

1.திரு. M.முகமது இலியாஸ்
2.திருமதி.M.சாஜிதா மரியம்
3.திருமதி.M.சாரம்மா

.....2,4,6 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

மேற்படி மனுதாரர் தரப்பு சம்மன்ஷை வழக்கில் 2,4,6 எதிர்மனுதாரர்கள் ஆஜராக 21.04.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை 21.04.2025-ம் தேதி காலை 10.00 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் தரப்பு எதிர்வாதத்தை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு தாங்கள் ஆஜராகாவிட்டால் தங்கள் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் இல்லை என்று கருதி ஒருதலைபட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்று தங்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

V.S.காந்திமதிநாதன், B.A.B.L.,
Advocate & Notary,
Dindigul.
Mobile: 98947-53777

**மாண்பமை சார்பு நீதிமன்றம்**
**உடுமலைப்பேட்டை**
**I.A.NO. 54 / 2022**
**H.M.O.P.NO. 77 / 2019**

சதீஸ்

..........மனுவாதி / எதிர்மனுவாதி

/எதிர்/

செல்வி, W/o.சதீஸ், D/o.ராசப்பன், கதவு எண். 5/92, பொன்னியம்மன் கோவில் முதல் வீதி, குன்றத்தூர், காஞ்சிபுரம்.

...........எதிர்மனுவாதி / மனுவாதி

எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மேற்படி மனுவாதி / எதிர்மனுவாதியானவர் கடந்த 15.02.2022-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒரு கட்சி உத்திரவை ரத்து செய்திட மனு தாக்கல் செய்துள்ளார். அதன் மனு எண் I.A.NO.54/2022 ஆகும். மேற்படி மனு உங்களின் ஆட்சேபணைக்காக வருகிற 20.03.2025-ந் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.30 மணிக்கு மாண்பமை நீதிமன்றத்தில் நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுவிடும் என்பதை அறியவும்.

என்.கே.செல்வக்குமார் பி. காம்.,பி.எல்.,
அட்வகேட்,
பேரூராட்சி அலுவலகம் எதிரில்,
மடத்துக்குளம்,
திருப்பூர் மாவட்டம்.

**BEFORE THE I ADDITIONAL FAMILY COURT AT CHENNAI**
**M.C No. 609 of 2024**

1.P.Usha, W/o. K.Manikandan,
D/o.Ponnuswamy,

.....First Petitioner

2.Minor M.Darshan,
Rep by mother and natural Guardian P.Usha,
Both are Residing at:
No.47, Ponnan Street,
Purasaiwalkam, Vepery,
Chennai – 600 007.

.....Second Petitioner

Versus

K.Manikandan,
S/o.Kumarikandaswamy,
No.20/14, Seetharappan Street,
Triplicane, Chennai – 600 005.

......Respondent

To,
K.Manikandan,
S/o.Kumarikandaswamy,
No.20/14, Seetharappan Street,
Triplicane, Chennai – 600 005.

The above case is filed against the respondent herein for maintenance for her and for her minor son Darshan. The Hon'ble Court was pleased to order paper publication for your appearance returnable by 03-04-2025. Therefore, kindly take notice that you should appear either in person or through your lawyer on the said date at 10.30a.m before the said court failing which the matter will be heard and decided in your absence.

Dated at Chennai on this the17 th day of March, 2025

USHA
First Petitioner

thinaboomi.com
தினபூமி, மார்ச் 16, 2025

### இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்:

# இந்திய அணியின் கேப்டனாக ரோகித் தொடர்வார்: பி.சி.சி.ஐ

மும்பை, மார்ச் 16-

சாம்பியன்ஸ் டிராபியில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றதையடுத்து, டெஸ்ட் அணியின் கேப்டன்சி குறித்து பி.சி.சி.ஐ. முக்கிய முடிவு எடுத்துள்ளது. அதில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவரே இந்திய அணியின் கேப்டனாக தொடரவுள்ளதாக பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



**சாம்பியன்ஸ் டிராபி...**

9-வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இதன் இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகன் விருது வென்ற ரோகித், கங்குலி, தோனிக்கு பிறகு சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை வென்ற இந்திய கேப்டனாக சாதனை படைத்தார். டி20 உலகக் கோப்பை, சாம்பியன்ஸ் டிராபி ஆகிய ஐ.சி.சி. கோப்பைகளை வென்ற ஒரே கேப்டன் என்ற தோனியின் சாதனையை அவர் சமன் செய்தார்.

**ஒயிட்வாஷ்...**

முன்னதாக ஆஸ்திரேலியாவில் நடந்த பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடரில் 1-3 என்ற கணக்கில் தோல்வியடைந்த இந்திய அணி, 10 ஆண்டுக்கு பிறகு ‘பார்டர் - கவாஸ்கர்’ கோப்பையை பறிகொடுத்தது. மேலும் சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் இந்தியா ஒயிட்வாஷ் ஆனது. அதனால் தொடர்ந்து 3-வது முறையாக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு செல்லும் வாய்ப்பையும் இந்தியா இழந்தது.

**புதிய கேப்டன்...**

இந்த தோல்விகளுக்கு இந்திய அணியின் கேப்டனான ரோகித் சர்மா முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறார். பேட்ஸ்மேனாக மட்டுமன்றி கேப்டன்ஷிப்பிலும் சொதப்பியது காரணமாக அமைந்தது. இதன் காரணமாக பெரும் விமர்சனத்தை சந்தித்த ரோகித் சர்மா மீண்டும் இந்தியாவுக்காக டெஸ்ட் போட்டிகளில் தேர்வு செய்வதற்கு வாய்ப்பு இல்லை என தகவல்கள் வெளியாகின. டெஸ்ட் போட்டிகளில் அவரின் கெரியர் முடிவுக்கு வந்துவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளது. அத்துடன் இந்திய டெஸ்ட் அணிக்கு புதிய கேப்டனை நியமிக்க பி.சி.சி.ஐ. முடிவெடுத்ததாகவும் கூறப்பட்டது.

**பி.சி.சி.ஐ. முடிவு...**

இந்நிலையில் தற்போது வெளியான தகவலின் படி, “சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை கேப்டனாக வென்றுள்ள ரோகித் சர்மாவே இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியின் கேப்டனாக தொடர்வார் என்று பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அந்த தொடருக்கு பின்னர் அவர் மற்றும் அணியின் செயல்பாட்டை பொறுத்து கேப்டன்சி மாற்றத்தை பார்க்கலாம் என்று பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

## டெல்லி அணியில் நடராஜன்

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.-ன் 18-வது சீசன் இந்த வருடம் நடைபெற உள்ளது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடர் வருகிற 22ம் தேதி தொடங்குகிறது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை எதிர்கொள்கிறது.


இந்த தொடருக்காக அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் . இந்த நிலையில் ,தமிழக வீரர் நடராஜன் டெல்லி அணியுடன் நேற்று இணைந்துள்ளார் . நடராஜனை ஐ.பி.எல். ஏலத்தில் ரூ.10.75 கோடிக்கு டெல்லி அணி வாங்கியது குறிப்பிடத்தக்கது

## பெங்களூரு அணியில் கோலி

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.-ன் 18-வது சீசன் இந்த வருடம் நடைபெற உள்ளது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடர் வருகிற 22ம் தேதி தொடங்குகிறது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை எதிர்கொள்கிறது.

இந்த தொடருக்காக அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் . இந்த நிலையில் , நட்சத்திர வீரர் விராட் கோலி பெங்களூரு அணியுடன் இணைந்துள்ளார். இது தொடர்பான புகைப்படத்தை அணி நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

## வார்னர் சினிமாவில் அறிமுகம்



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரிலிருந்து பிரபல தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுனின் புஷ்பா பட ஸ்டைலில் இவர் செய்யும் ரீல்ஸ்கள் மிகவும் புகழ் பெற்றவை. தீபாவளி, விநாயகர் சதுர்த்தி என இந்திய விழாக்களுக்கு தவறாமல் வாழ்த்துகளைத் தெரிவிப்பார். “டேவிட் வார்னர் ஆஸ்திரேலியரை போல் அல்லாமல் இந்தியராகவே அதிகம் இருக்கிறார். நான் அதைத்தான் அவரிடம் சொல்லுவேன். 70 சதவிகிதம் இந்தியர்; மீதி 30 சதவிகிதம் ஆஸ்திரேலியர்” என வார்னர் குறித்து அவரது சக தோழர் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

புஷ்பா 2 படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடித்ததாக தகவல்கள் வெளியாகின. ஆனால், படத்தில் அந்தமாதிரி எதுவும் வரவில்லை. இந்நிலையில் தெலுங்கு சினிமாவில் டேவிட் வார்னர் நடிப்பது உறுதியாகியுள்ளது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் உருவாகும் ராபின்ஹூட் என்ற திரைப்படத்தில் டேவிட் வார்னர் நடிக்கிறார். இந்தப் படம் மார்ச்.28ஆம் தேதி வெளியாகவிருக்கிறது. நடிகர் நிதின், நடிகை ஸ்ரீ லீலா முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். இந்தப் படத்தை வெங்கி குடுமுலா இயக்கியுள்ளார். நடிகரும் இசையமைப்பாளருமான ஜி.வி.பிரகாஷ் இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

# தமிழ் இந்த நாட்டின், உலகத்தின் சொத்து: அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பெருமிதம்

சென்னை, மார்ச் 16-

தமிழ் மொழி இந்த நாட்டின் சொத்து. இந்த உலகத்தின் சொத்தும் கூட. அதில் நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவோம் என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசினார்.

மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ஸ்ரீபெரும்புதூரில் நடந்த நிகழ்ச்சியில் பேசியதாவது: தமிழ் ஒரு இனிமையான மொழி. எனக்கு சில வார்த்தைகள் தான் தெரியும். வணக்கம், எப்படி இருக்கீங்க. நன்றி. நான் ஒரு அதிர்ஷ்டசாலி. நான் படித்த கான்பூர் ஐ.ஐ.டி.,யில் சடகோபன் என்ற பேராசிரியர் இருந்தார். அவர் தான் எனக்கு தமிழை அறிமுகப்படுத்தினார். தமிழ் கலாசாரத்தையும் அவர் அறிமுகம் செய்தார். நாங்கள் அனைவரும் தமிழ் கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் மதிக்கிறோம்.

தமிழ், இந்த நாட்டின் சொத்து. இந்த உலகத்தின் சொத்தும் கூட. அதில் நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவோம். அனைத்து இந்திய மொழிகளையும் கொண்டாடுவோம். இந்த உணர்வோடு தான் நம் பிரதமர் பணியாற்றி வருகிறார். இந்திய நாட்டில் பேசப்படும் ஒவ்வொரு மொழியும் அதற்குரிய மகத்தான இடத்தை பெற வேண்டும்.உரிய மரியாதை கிடைக்கச் செய்ய வேண்டும். உரிய வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக பாடுபடுகிறார். நமது சகோதர உறவு, நட்புறவு, வேறுபட்ட நாகரிகங்களுக்கு இடையிலான உறவுகளில் எந்த ஒரு தடையும் வந்து விடக்கூடாது.

நம் நாட்டை வலிமையானதாக்கும் ஒற்றை இலக்குடன் தான் நாம் அனைவரும் பார்க்க வேண்டும்; பணியாற்ற வேண்டும். உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்தவும், நமது வலிமையை உலகம் அங்கீகரிப்பதை உறுதி செய்யவும் நாம் பாடுபட வேண்டும். இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசினார்.

# சபாநாயகரை சந்தித்தது ஏன்? செங்கோட்டையன் விளக்கம்

சென்னை, மார்ச் 16-

சபாநாயகரை சந்தித்தது குறித்து செய்தியாளர்களிடம் செங்கோட்டையன் விளக்கமளித்தார்

தமிழக சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னதாக எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை. சட்டசபையில் பழனிசாமியை சந்திப்பதையும் அவர் தவிர்த்தார்.

இந்நிலையில், சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-வது நாளான நேற்றும் செங்கோட்டையன் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அறைக்கு செல்வதை தவிர்த்தார். அவர் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அறைக்கு செல்லாமல் சபாநாயகர் அறைக்கு சென்றார். பின்னர் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்ட செங்கோட்டையன் சட்டசபை கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்த நிலையில், சபாநாயகரை சந்தித்தது ஏன்? என்பது குறித்து செய்தியாளர்களிடம் செங்கோட்டையன் விளக்கமளித்தார். அப்போது பேசிய அவர், கோபி தொகுதியில் உள்ள கொடிவேரி அணையில் நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் அளவிற்கு தண்ணீர் எடுக்கும் ஒரு தொழிற்சாலை அமைய இருப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என விவசாயிகள் தன்னிடம் மனு அளித்ததாகவும், இது தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுப்பதற்காகவே சபாநாயகரை சந்தித்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த சந்திப்பின் போது அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அருகில் இருந்ததாகவும் செங்கோட்டையன் குறிப்பிட்டார். இதையடுத்து ‘எடப்பாடி பழனிசாமியை சந்திப்பீர்களா?’ என செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, அவருக்கு, தனக்கும் எந்த முரண்பாடும் கிடையாது என்றும், தன்னுடைய கொள்கை உயர்வானது, பாதை தெளிவானது என்றும் திட்டவட்டமாக செங்கோட்டையன் பதிலளித்தார்.

# த.வெ.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க 2,500 பேருக்கு அழைப்பு

சென்னை, மார்ச் 16-

த.வெ.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க 2500 பேருக்கு அழைப்பிதழ் அனுப்பப் பட்டுள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் அரசியல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூரில் உள்ள ராமச்சந்திரா கன்வென்சன் சென்டரில் நடக்கிறது. பொதுக்குழு கூட்டம் மற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றுவது பற்றி கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்துடன் கட்சி தலைவர் விஜய் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார். மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும் மற்றும் கட்சியின் எதிர்கால திட்டங்கள், மக்கள் நலத்திட்டங்கள், கூட்டத்தில் நிறைவேற்றப் பட இருக்கிறது.

பின்னர் பொதுக்குழு தீர்மானங்கள் தேர்தல் கமிஷனுக்கு கட்சி சார்பில் அனுப்பப்பட இருக்கிறது. கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஒரு மாவட்டத்திற்கு 15 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. கூட்ட அழைப்பு மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கும் மாவட்ட செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் என 15 பேர் பங்கேற்க இருக்கின்றனர். அதன்படி கூட்டத்தில் சுமார் 2,500 பேர் பங்கேற்க இருக்கின்றனர். இதற்கான ஏற்பாடுகளை கட்சி தலைவர் விஜய் அறிவுறுத்தலின் பேரில் கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் செய்து வருகிறார்.

பொதுக்குழு கூட்டத்தில் தேர்தல் கூட்டணி, அடுத்தக்கட்ட நடவடிக்கை மற்றும் மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி கட்சி தலைவர் விஜய் பேச இருக்கிறார். தொடர்ந்து அடுத்தடுத்து வெளியாகி வரும் விஜய் அறிவிப்புகள் தொண்டர்களிடையே மேலும் உற்சாகத்தை அதிகரித்து வருகிறது.

# எனக்கு கொலை மிரட்டல் வந்தது: வருண் சக்கரவர்த்தி அதிர்ச்சி தகவல்

மும்பை, மார்ச் 16-

2021 டி20 உலகக் கோப்பை தோல்வியால் தனக்கு கொலை மிரட்டல் விடுத்தது குறித்து அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளார்.



**சிறப்பான பந்து வீச்சு...**

இந்திய அணி நியூசிலாந்தை வீழ்த்தி சாம்பியன்ஸ் டிராபியை சமீபத்தில் வென்றது. அதில் தமிழக வீரர் வருண் சக்கரவத்தி சிறப்பாக பங்காற்றினார். 3 போட்டிகளில் 9 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார் வருண் சக்கரவத்தி. அவரது சுழலால் பலரையும் திணறடித்தார். குறிப்பாக அரையிறுதிப் போட்டியில் சிறப்பாக பந்து வீசினார்.

**உலகக் கோப்பை தோல்வி...**

2021 டி உலகக் கோப்பைத் தொடரில் இந்திய அணி குரூப் ஸ்டேஜ் போட்டிகளோடு வெளியேறியது. 5 போட்டிகளில் 3இல் மட்டுமே வென்றது. அரையிறுதிக்கு தகுதிபெறாமல் வெளியேறியதால் ரசிகர்கள் சோகத்தில் மூழ்கினார்கள். இந்தத் தொடரில் ஆஸி. அணி நியூசிலாந்தை வீழ்த்தி கோப்பையை வென்று அசத்தியது.

**பாதிக்கப்பட்டேன்...**

இந்நிலையில் பாட்காஸ்ட் நிகழ்ச்சி ஒன்றில் அதிர்ச்சி தகவலைப் பகிர்ந்துள்ளார். அவர் கூறியதாவது: 2021 டி20 உலகக் கோப்பை எனக்கு மிகவும் கடுமையான நாள்கள். அப்போது கடுமையான மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டேன். மிகவும் அதிக எதிர்பார்ப்புடன் அணிக்கு வந்தேன். ஆனல, ஒரு விக்கெட் கூட எடுக்காததால் அடுத்த மூன்றாண்டுக்கு என்னை அணியில் எடுக்கக்கூட தயங்கினார்கள்.

**கொலை மிரட்டல்கள்...**

உலகக் கோப்பை முடிந்ததும் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே எனக்கு கொலை மிரட்டல்கள் வந்தன. இந்தியா வந்தால் உயிருடன் இருக்க மாட்டாய் என மிரட்டல் விடுவித்தவர்கள் தெரிவித்தார்கள். என்னுடைய வீட்டையும் கண்டறிந்தார்கள். விமான நிலையத்திலிருந்து சிலர் என்னை பைக்கில் பின் தொடர்ந்தனர். ரசிகர்கள் உணர்ச்சிகரமாக இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது என்றார்.

# பாலிடெக்னிக் கல்லூரி தேர்வில் தோல்வி அடைந்தவர்களுக்கு சிறப்பு வாய்ப்பு

## அமைச்சர் கோவி.செழியன் தகவல்

சென்னை, மார்ச் 16-

பாலிடெக்னிக் கல்லூரி இறுதி ஆண்டு தேர்வில் தோல்வி அடைந்தவர்களுக்கு நிலுவைப் பாடங்கள் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

பாலிடெக்னிக் கல்லூரி பயின்று பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் தேர்ச்சி பெறாமல் நிலுவை வைத்துள்ள பாடங்களுக்கு தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு வழங்கும்படி மாணவர்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசீலித்து உத்தரவிட்டதன்படி, பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் இறுதி ஆண்டு முடித்தும் பல்வேறு காரணங்களால் சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல இயலாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அவர்களும் வாழ்வில் முன்னேற்றம் பெற ஏதுவாக அரசு எதிர்வரும் ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025 பருவத் தேர்வுகளின்போது, நிலுவைப் பாடங்கள் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு வழங்க முடிவெடுத்துள்ளது.

இதுகுறித்த விவரங்களை https://dte.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் அறிந்து கொள்ளலாம். இச்சிறப்பு வாய்ப்பினை சில பாடங்களில் தேர்ச்சி பெறாத பாலிடெக்னிக் மாணவர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை த.வெ.க. மாவட்ட செயலாளர் மாரடைப்பால் மரணம்: விஜய் இரங்கல்

சென்னை, மார்ச் 16-

திருநெல்வேலி த.வெ.க. மாவட்ட செயலாளர் மரடைப்பால் மரணம் அடைந்தார் அவரது குடும்பத்தினருக்கு விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக்கழகத்தின் 2-ம் ஆண்டு தொடக்க விழா சமீபத்தில் மாமல்லபுரத்தில் நடந்தது. இந்த விழாவுடன் சேர்த்து பொதுக்குழு கூட்டத்தை கூட்ட திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் நிர்வாகிகள் நியமனம் தாமதம் தொடர்பாக பொதுக்குழு கூட்ட தேதி தள்ளிப்போனது. கட்சியில் 120 மாவட்ட செயலாளர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டு, தற்போது வரை 114 மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது தவிர மாநில நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில், கட்சியின் முதல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூரில் வருகிற 28-ம் தேதி நடக்கிறது.

இந்த பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் நியமனத்திற்கு ஒப்புதல் பெறப்படுகிறது. கட்சியின் சட்ட திட்ட விதிகள் அறிவிக்கப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது. கட்சியின் செயல்பாடு, கூட்டணி நிலைப்பாடு குறித்து நிர்வாகிகளிடம் விஜய் கருத்து கேட்க இருக்கிறார். இந்த கூட்டத்தில் செயற்குழு, பொதுக்குழு, மாநில, மாவட்ட நிர்வாகிகள் என 2,500 பேர் பங்கேற்க இருக்கிறார்கள். கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட இருக்கிறது. இதற்கான அறிவிப்பு நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் திருநெல்வேலி வடக்கு மாவட்ட செயலாளர் சஜி மாரடைப்பால் காலமானதாக தகவல் வெளியாகி உள்ளது. கட்சி பணிகளுக்காக சென்னை சென்றிருந்த நிலையில், மாரடைப்பு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தநிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திருநெல்வேலி வடக்கு மாவட்ட செயலாளர் சஜி மறைவுக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழக வெற்றிக் கழகத்தின் திருநெல்வேலி வடக்கு மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வந்த அன்பிற்குரிய சகோதரர் திரு. சஜி (எ) B.அந்தோணி சேவியர் அவர்கள் காலமானது, மிகுந்த அதிர்ச்சியையும் மன வேதனையையும் அளிக்கிறது. என் மீதும் கழகத்தின் மீதும் அளவற்ற அன்பு கொண்டு கழகப் பணியாற்றி வந்தவர். அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாஸ்டர்ஸ் லீக் டி-20 இறுதிப் போட்டி: இந்தியா–மே.இ.தீவுகள் இன்று மோதல்

மும்பை, மார்ச் 16-

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் டி20 போட்டியில் மே.இ.தீ. அணி இலங்கையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

**மே.இ.தீவுகள் வெற்றி....**

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் இலங்கை மாஸ்டர்ஸ் அணிகள் விளையாடியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இலங்கை மாஸ்டர்ஸ் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் செய்த மேற்கிந்தியத் தீவுகள் 5 விக்கெட்டுகளை இழந்து 179 ரன்கள் எடுத்தது. அடுத்து விளையாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 173/9 ரன்கள் எடுத்தது. மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணியின் டினோ பெஸ்ட் 4 விக்கெட்டிகள் கைப்பற்றி ஆட்ட நாயகன் விருது பெற்றார்.



**இந்தியாவுடன் மோதல்...**

இறுதி போட்டியில் இந்தியாவுடன் மே.இ.தீ. அணி மோதவிருக்கிறது. இந்தப் போட்டி இன்று (மார்ச்.16) இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்கவிருக்கிறது. இந்திய அணிக்கு சச்சினும் மே.இ. தீ. அணிக்கு லாராவும் கேப்டனாக இருக்கிறார்கள்.

# அரசு தொடக்க பள்ளிகளில் 67 ஆயிரம் மாணவர்கள் சேர்ப்பு

சென்னை, மார்ச் 16-

அரசு தொடக்க பள்ளிகளில், 13 நாட்களில், 67,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

தமிழக பள்ளிக்கல்வி துறையின் கீழ், 37,553 பள்ளிகள் இயங்குகின்றன. ஆங்கில கல்வியில் குறைபாடு, ஆசிரியர்கள் பற்றாக்குறை, உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாதது உள்ளிட்ட காரணங்களால், அரசு பள்ளிகளில் தங்களின் குழந்தைகளை சேர்க்க, பெற்றோர் தயங்கும் சூழல், 25 ஆண்டுகளாக நீடித்தது.

இதனால், பல பள்ளிகளில், ஒரு வகுப்பில் ஒற்றை இலக்கத்தில் மட்டுமே, குழந்தைகள் படிக்கும் நிலை ஏற்பட்டது. இதனால், பள்ளிகள் இணைப்பு, உபரி ஆசிரியர்கள் இடம் மாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளை, பள்ளிக்கல்வி துறை எடுத்து வந்தது.

இந்நிலையில், கொரோனா தொற்றுக்கு பின், வகுப்பறைகளையே திறக்காமல், கட்டணம் வசூலித்த தனியார் பள்ளிகளால் பாதிக்கப்பட்ட பெற்றோர், தங்களின் குழந்தைகளை அரசு பள்ளிகளில் சேர்க்க முன்வந்தனர். அதேநேரம், ஆசிரியர்களும் தங்களின் பணியிடத்தை காப்பாற்றும் வகையில், அதிக மாணவர்களை சேர்க்கத் துவங்கினர். இதை, பள்ளிக்கல்வி துறையும் ஊக்குவித்தது.மேலும், மத்திய அரசின் தேசிய கல்வி கொள்கையை பின்பற்றி, இல்லம் தேடி கல்வி, எண்ணும்- எழுத்தும், காலை உணவு, ‘ஸ்மார்ட்’ வகுப்பறைகள் உள்ளிட்ட திட்டங்களை, தமிழக அரசு செயல்படுத்த துவங்கியதால், பெற்றோருக்கு, தங்களின் குழந்தைகளை அரசு தொடக்க பள்ளிகளில் சேர்க்கும் ஆவல் வந்துள்ளது.

இந்நிலையில், இம்மாதம், 1ம் தேதி முதல் சேர்க்கை துவங்கியுள்ள நிலையில், 13ம் தேதி வரையிலான, 13 நாட்களில், 67,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்துள்ளதாக, தொடக்கக்கல்வி துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும், மாணவர்களுக்கு அரசு செயல்படுத்தும் இலவச திட்டங்களை எடுத்துக் கூறி, பெற்றோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, புதிதாக ஐந்து லட்சம் மாணவர்களை, அரசு பள்ளிகளில் சேர்க்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

# 7,783 அங்கன்வாடி பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசு அனுமதி

சென்னை, மார்ச் 16-

7,783 அங்கன்வாடி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்ப அனுமதி அளித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது;இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது,


சமூக நலன் மற்றும் மகளிர் அதிகாரமளித்தல் துறை ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் அங்கன்வாடி பணியாளர், மினி அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் நியமனத்திற்கான திருத்தப்பட்ட / ஒருங்கிணைந்த தகுதி அளவுகோல்கள் 7,783 அங்கன்வாடி பணியாளர் / மினி அங்கன்வாடி பணியாளர் / அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முதன்முறையாக ஓய்வு குறித்து மனம் திறந்தார் விராட் கோலி

பெங்களூரு, மார்ச் 16-

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின் அடுத்து என்ன? என்ற சுவாரசிய தகவலைப் பகிர்ந்திருக்கிறார் விராட் கோலி.



**ஐ.பி.எல். தொடர்...**

ஐ.பி.எல். தொடரில் ‘ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு(ஆர்.சி.பி) அணிக்காக விளையாடுவதற்காக பெங்களூரு சென்றடைந்துள்ள விராட் கோலி அங்கு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

**சிறந்த தருணம்...**

அப்போது அவர் பேசியிருப்பதாவது: “விளையாட்டை ஊக்குவிக்கும் ஒரு தேசத்தில், ஆடவர்களை மையப்படுத்தி மட்டும் விளையாட்டை வளர்க்க முடியாது. இதனால், மகளிர் கிரிக்கெட் பிரீமியர் லீக் மேலும் வளர்ச்சியடையும். 2028 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றாக கிரிக்கெட் இடம்பெற்றால் அப்போது இந்தியா வென்று பதக்கத்துடன் திரும்புவது இந்தியாவுக்கு சிறந்த தருணமாக அமையும்.

**திரும்பப்பெறுவேன்...**

அந்த ஒலிம்பிக்கில் இந்திய ஆடவர் கிரிக்கெட் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றால், அப்போது, நான் சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தாலும், அந்த ஒரேயொரு போட்டியில் விளையாடுவதற்காக மட்டுமாவது எனது ஓய்வு முடிவை திரும்பப்பெறுவேன்.

**ஓய்வு குறித்து...**

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின் அடுத்து என்ன செய்யப்போகிறேன் என்பதைக் குறித்து சத்தியமாக எனக்கு தெரியாது. ஆனால், இதே கேள்விக்கான பதிலை அறிய வேண்டி சக வீரர் ஒருவரிடம் இது குறித்து வினவினேன். அப்போது அவரும் இதே பதிலையே தந்தார். ஒருவேளை, நிறைய இடங்களுக்கு பயணம் மேற்கொள்வேன்” என்றார்.

மரம்
மனிதனின்
உரம்

# முதுகுளத்தூர் அருகே அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி ஆலோசனைக்கூட்டம்



**முதுகுளத்தூர், மார்ச் 16-**
முதுகுளத்தூர் மேற்கு அ.தி.மு.க. ஒன்றியம் சார்பில் சாத்தனூர், மேலக்கொடுமலூர் ஊராட்சிகளில் பூத் கமிட்டி அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாத்தனூர் மற்றும் மேலக்கொடுலூர் ஊராட்சியில் அதிமுக மேற்கு ஒன்றியம் சார்பில் பூத் கமிட்டி அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் மற்றும் பாகம் கிளை கட்டமைத்தல் மற்றும் இளம் தலைமுறை விளையாட்டு வீரர்கள் அணி உறுப்பினர் சேர்க்கை, வளர்ச்சிப் பணி தொடர்பான ஆய்வு கூட்டம் முதுகுளத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கர்ணன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அம்மா பேரவை இணைசெயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ராஜவர்மன், அமைப்புச் செயலாளர் சுதா.கே.பரமசிவம், ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் எம்.ஏ. முனியசாமி, எம்.ஜி.ஆர். மன்ற துணை செயலாளர் எம்.சுந்தரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டர். இந்த நிகழ்ச்சியில் சாத்தனூர், தட்டான்குடி யிருப்பு, அப்பனேந்தல், மேலக்கொடு மலூர், கீழக்கொடு மலூர், கீழக்குளம், கொட்டகுடி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு வருகின்ற 2026 சட்ட மன்றத் தேர்தலில் எவ்வாறு பணி ஆற்றவேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி.நிறைகுளத்தான் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மலேசியா பாண்டியன் முதுகுளத்தூர் மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.டி. செந்தில்குமார், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சந்திரன் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**நத்தத்தில் நடந்து வரும் மாசிப் பெருந்திருவிழாவின் 11-ம் நாளில் அன்ன வாகனத்தில் சரஸ்வதி அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்த நத்தம் மாநகரின் புன்னகை அரசி மாரியம்மன்**

# அம்ருதா பல்கலை. சார்பில் கடற்பாசி சாகுபடி மூலம் கடலோரப் பெண்களுக்கு ஆதரவு



**ராமநாதபுரம், மார்ச் 16-**
அம்ருதா பல்கலைக்கழகத்தின் சார்பில் கடற்பாசி சாகுபடி கடலோர பெண்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

அம்ருதா பல்கலை. அம்மாச்சி ஆய்வகங்கள், மகளிர் முன்னேற்றம், பாலின சமத்துவ மையம் சார்பில், ப்ளூ இஸ் தி நியூ பிங்க் எனும் முன்னோடி திட்டம் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் தொடங்கிய இம்முயற்சி, கடல் பாதுகாப்பு, நிலையான வாழ்வாதாரங்களில் மகளிரை பங்களிக்கச்செய்து, காலநிலை மீள்தன்மை, பொருளாதார சுதந்திர அவசியத்தை வலியுறுத்துகிறது.

இம்முயற்சியின் முக்கிய பகுதியாக, அம்ருதா பல்கலை சம்பை, ஓலைக்குடா, திருப்பாலைக்குடி, தொண்டி, சோழியக்குடி கிராமங்களைச் சேர்ந்த மகளிர் 115 பேருக்கு கடற்பாசி சாகுபடிக்கு தேவையான அத்தியாவசிய உபகரணங்களை விநியோகித்தது. 2023-ம் ஆண்டு தொடங்கிய கடற்பாசி வளர்ப்பு பயிற்சி திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழலுக்கு உகந்த கடல்சார் நிறுவனங்களை நிறுவுவதற்கு தேவையான திறன்கள், கருவிகள், சந்தை அணுகலை மகளிருக்கு வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

கடற்பாசி சாகுபடியில் 64 பெண்கள் ஏற்கனவே பயிற்சி பெற்றுள்ள நிலையில், இம்முயற்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து வருகிறது.

நடப்பாண்டு மார்ச் மாதம் 1,500 கிலோ கடற்பாசி சாகுபடி செய்து மகளிர் சாதித்துள்ளனர். இத் திட்டத்திற்கு மானியம் கிடைத்துள்ளது. கடல் சார்ந்த தொழில்களை ஒருங்கிணைக்கும் கடற்பாசி சாகுபடி பெண்களின் நிலையான மாற்று வருவாய் நோக்கத்தை வலுப்படுத்துகிறது.

பாதுகாப்பு, செயல்திறனை மேம்படுத்த லைப் ஜாக்கெட்கள், நீருக்கடியில் கண்ணாடிகள், மீன் வலைகள், கயறுகள், கத்திகள் உள்பட பிற அத்தியாவசிய கருவிகள் வழங்கப்பட்டன. இணை இயக்குநர் ஸ்ரீவித்யா சேஷாத்ரி தொடங்கி வைத்தார், மீன்வளத் துணை இயக்குநர் பிரபாவதி. அம்ருதா வித்யாலயம் மேலாளர் பிரம்மச்சாரிணி. லட்சுமி, கள ஒருங்கிணைப்பாளர் திருமுருகன், அம்மாச்சி ஆய்வகங்களைச் சேர்ந்த பிரம்மச்சாரிணி. அம்ருதா, பானு, அஸ்வதி ஆகியோர் இம்முயற்சியை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தனர். 2024-ம் ஆண்டு ஏப்ரலில், 1,290 கிலோ கடற்பாசி சாகுபடி செய்து சாதனை படைத்த இம்முயற்சி பெண்கள் முன்னேற்றம், கடல் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்கான அம்ருதா பல்கலை., உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. கடற்பாசி சார்ந்த தயாரிப்புகளுக்கான உலகளாவிய தேவை தொடர்ந்து வளர்ந்து வருவதால் ப்ளூ இஸ் தி நியூ பிங்க் முயற்சியானது பெண்களின் பொருளாதாரத்தை பாதுகாப்பது மட்டுமின்றி, பசுமையான எதிர்காலத்திற்கான நிலையான கடல் சார்ந்த விவசாய நடைமுறைகளை ஊக்குவிக்கிறது.

## நரிக்குடி அருகே துணிகரம்:
# அரசு மதுபான டாஸ்மாக் கடையை உடைத்து மதுபானங்கள் திருட்டு



**விருதுநகர், மார்ச் 16-**
நரிக்குடி அருகே அரசு மதுபான டாஸ்மாக் கடையை உடைத்து மதுபான பாட்டில்கள் திருடப்பட்டது.

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி அருகே இருஞ்சிறை விலக்கு பகுதியில் அரசு டாஸ்மாக் கடை செயல்பட்டு வருகிறது. இங்கு மேலேந்தல் பகுதியை சேர்ந்த அறிவழகன்(49) சேல்ஸ்மேனாகவும், அருப்புக்கோட்டையை சேர்ந்த செல்வராஜ் (55) சூப்பர்வைசராகவும் பணிபுரிந்து வருகின்றனர். வழக்கமாக இந்த டாஸ்மாக் கடையில் நாள்தோறும் ரூ.60 ஆயிரம் முதல் ரூ.80 ஆயிரம் வரை மதுபானம் விற்பனையாகும்.

இந்த நிலையில் டாஸ்மாக் ஊழியரான அறிவழகன் வழக்கமாக பணி முடிந்து கடையை பூட்டி விட்டு வீடு திரும்பிய நிலையில் மீண்டும் டாஸ்மாக் கடையை திறக்க வந்த போது கடையின் பூட்டு உடைந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். இந்த நிலையில் உள்ளே சென்று பார்த்த போது அங்கு பீர் மற்றும் மதுபான அட்டைப்பெட்டிகள் சிதறி கிடந்தது தெரியவந்தது. அப்போதுதான் மர்மநபர்கள் பூட்டை உடைத்து கைவரிசையை காட்டியதும், கல்லாப்பெட்டியை உடைக்க முடியாததால் அங்கிருந்த சுமார் 130 பீர் மற்றும் மதுப்பாட்டில்களை கொள்ளையடித்து விட்டு தப்பி சென்றதும் தெரியவந்தது.

இதுகுறித்து டாஸ்மாக் கடை ஊழியரான அறிவழகன் நரிக்குடி போலீசாருக்கு தகவல் கொடுத்த நிலையில் அங்கு விரைந்து சென்ற போலீசார் திருட்டு சம்பவம் குறித்து விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். அதனை தொடர்ந்து அப்பகுதியில் போலீசார் தடயவியல் நிபுணர்கள் மற்றும் மோப்பநாய் உதவியுடன் விசாரணை மேற்கொண்டனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# விருப்பாச்சியில் நீர் மோர் பந்தல் திறப்பு



**ஒட்டன்சத்திரம், மார்ச் 16-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட விருப்பாட்சியில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் நீர் மோர் பந்தலை ஒன்றிய செயலாளர் தர்மராஜன் திறந்து வெயில் தணிக்கும் பழங்களைப் பொதுமக்களுக்கு வழங்கினார்.

நிகழ்வில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, ஊர் தலைவர் செந்தில், முன்னாள்

ஊராட்சி மன்ற தலைவர் பன்னீர்செல்வம், முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர் முருகன், உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நிலக்கோட்டை அருகே மகளிர் தின விழிப்புணர்வு பேரணி




**வத்தலகுண்டு, மார்ச் 16-**
நிலக்கோட்டை அருகே மகளிர் தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதியில் பள்ளப்பட்டி வேலாயுதபுரம் கிராமத்தில் இருந்து மாலத்தெரு கிராமம் வரை மகளிர் தின விழா விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் சைல்டு வாய்ஸ் கள ஒருங்கிணைப்பா ளர் சாரதா வரவேற்றார். சைல்டு வாய்ஸ் திட்ட மேலாளர் நெல்சன் சந்திரசேகர் நோக்கம் குறித்து பேசினார்.

சைல்டு வாய்ஸ் திட்ட இயக்குனர் அண்ணாதுரை, கருத்துரை ஆற்றினர். நிகழ்ச்சியை சிறப்பு சார்பு ஆய்வாளர்.தங்க நிலா,அனைத்து மகளிர் காவல் நிலையம், நிலக்கோட்டை, அவர்களும், சாந்தி,முதல் நிலை பெண் காவலர் நிலக்கோட்டை தலைமையில் பேரணியை கொடி அசைத்து தொடங்கிவைத்தனர், .தங்கபாண்டியம்மாள் சமுதாய ஆதரவு குழு கூட்டமைப்பு செயலாளர் சிறப்புரை ஆற்றினர்.மகளிர் தின விழா குறித்து விழிப்பு பேரணியில் பெண்கள் முன்னேற்றம், ஆண் பெண் சமத்துவத்தை நிலை நாட்டல், பெண்கல்வி, பெண்கள் பாதுகாப்பு,பெண்ணின் உரிமை, பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமை,பெண்ணை மதிப்போம், சமுதாயத்தை உயர்த்துவோம், பெண்கள் நலமே நாட்டின் நலம்,நீ பெண் என்பதில் பெருமை கொள். பெண்ணே உன்னால் எல்லாம் முடியும்.பெண் எழுச்சி புதிய சமூகத்தின் தொடக்கம். பெண்களின் குரல் சமூகத்தின் சக்தி என்று கோஷமிட்டு ஊர்வலம் செல்லப்பட்டது. இப் பேரணியில் வேலாயுதபுரம், மாலத்தெரு, கவுண்டன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள வளர் இளம் பெண்கள்,வளர இளம் ஆண்கள், சமுதாய ஆதரவு குழு உறுப்பினர்கள், தொழிலாளர் ஆதரவு குழு உறுப்பினர்கள் மற்றும் கிராம பொது மக்கள் உட்பட 60 நபர்கள் கலந்து கொண்டனர்.இந்திரா கள ஒருங்கிணைப்பாளர் நன்றி கூறினார்.

# கடலாடி அருகே இயற்கை வேளாண்மை குறித்து கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி



**கடலாடி, மார்ச் 16-**
கடலாடி அருகே இயற்கை வேளாண்மை குறித்து கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி அருகே உள்ள கடுகுசந்தை கிராம பகுதியில் நம்மாழ்வார் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் ஊரக வேளான் அனுபவ பயிற்சி மூலம் அப்பகுதியில் வசிக்கும் நாகலிங்கம் என்பவரிடம்

இயற்கை வேளாண்மை பற்றி பயிற்சி பெற்றனர். இப்பயிற்சியில் மண்ணின் தரம் உயர்தல் மற்றும் நன்மை தரும் நுண்ணுயிர் பெருக்கம் குறித்தும் கேட்டறிந்தனர்.

# நத்தம்: பைக்கில் இருந்து தவறி விழுந்த வாலிபர் பலி



**நத்தம், மார்ச் 16-**
நத்தம் அருகே பைக்கில் இருந்து தவரி விழுந்து வாலிபர் உயிரிழந்தார்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஊராளிபட்டியை சேர்ந்தவர் செபஸ்டியான்ஜான்கென்னடி (24). இவர் நேற்று முன்தினம் தனது பைக்கில் நத்தம் வந்து விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். அம்மன்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த பைக் சாலையோரத்தில் கவிழ்ந்தது. இதில் பலத்த காயமடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார் ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் செபஸ்டியான்ஜான் கென்னடி நேற்று காலை இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் அருள்குமார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# ஆத்தூரில் நவீன தார் சாலை அமைக்கும் பணி: கண்காணிப்பு பொறியாளர் நேரில் ஆய்வு



**வத்தலக்குண்டு, மார்ச் 16-**
ஆத்தூரில் நவீன தார் சாலை அமைக்கும் பணியை கண்காணிப்பு பொறியாளர் நேரில் சென்று ஆய்வு செய்தார். திண்டுக்கல் மாவட்டம் , திண்டுக்கல் நெடுஞ்சாலைத்துறை கோட்டம், ஆத்தூர் நெடுஞ்சாலை உட்கோட்டத்திற்கு உட்பட்டுள்ள சொக்கலிங்கபுரம் கிராமச் சாலை, பச்ச மலையான் கோட்டை திருமலை கவுண்டன்பட்டி சாலை4.65 கிலோமீட்டர் சாலையினை ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2.22 கோடி மதிப்பில் நவீன தார் சாலை அமைக்கும் பணி சிறப்பாக நடைபெற்றது. இப்ப பணியினை கண்காணிப்பு பொறியாளர் மதுரை ஆர் கே ரமேஷ் நடைபெற்ற பணியினை ஆய்வு செய்தார்கள். திண்டுக்கல் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் கே பி சங்கர் ஆத்தூர் நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் கண்ணன் உதவிப் பொறியாளர் பரத் உதவிப் பொறியாளர் அருண் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# சிவகாசியில் 10 கிலோ கஞ்சா பறிமுதல்: இரண்டு பேர் கைது



**விருதுநகர், மார்ச் 16-**
சிவகாசியில் போலீசார் நடத்திய திடீர் சோதனையில் 10 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்ததோடு, பெண் உட்பட இருவரைக் கைது செய்தனர்.

சிவகாசி, அறிஞர் அண்ணா காலனியில் மனித உயிர்களுக்கு கேடு விளைவிக்கும் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, சிவகாசி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வெற்றிமுருகன் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் ரோந்து சென்றனர். அங்குள்ள பொது கழிப்பிடம் அருகே சென்ற போது, சந்தேகிக்கும் வகையில் இருவர் நின்று கொணடிருந்தனர். போலீசாரைக் கண்டதும் தப்பியோட முயன்றுள்ளனர்.

இதையடுத்து, அவர்களைப் பிடித்து சோதனையிட்டதில், 10.200 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது. எனவே, அவற்றை பறிமுதல் செய்த போலீசார், பின்பு இருவரிடமும் விசாரணை நடத்தினர். அதில், சிவன் கோவில் நந்தவனத் தெருவைச் சேர்ந்த சண்முகக்கனி(67), அதே பகுதியைச் சேர்ந்த ராஜலட்சுமி (29) என்பது தெரிய வந்தது. இதையடுத்து, இருவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்த போலீசார் சிறையில் அடைத்தனர்.

# முசுவனூத்து அரசு கள்ளர் பள்ளியில் 89-வது ஆண்டு விழா




**வத்தலகுண்டு, மார்ச் 16-**
முசுவனூத்து அரசு கள்ளர் பள்ளியில் 89-வது ஆண்டு விழா நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே முசுவனூத்து அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் பாலசுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக வட்டார வளமையம் ஆசிரியர் பயிற்றுநர் ரிச்சர்ட், நிலக்கோட்டை ஒன்றிய பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் டாக்டர் செல்வராஜ்,

பள்ளி மேலாண்மை குழு தலைவர் கார்த்திகா கலந்து கொண்டு பேச்சுப் போட்டி பாடல், பழமொழி, திருக்குறள் ஒப்புவித்தல் கலை நிகழ்ச்சிகள் பங்கு பெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டினர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் சிவகாமி, ராஜகுமாரி,

மணிகண்டன் காசிமாயன், ராபர்ட் ஜோன்ஸ், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் செந்தில் குமரன் நன்றி கூறினார்.



சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் வேளாண்மை நலத்துறை செயலாளர் தட்சிணாமூர்த்தி, ஆணையர் ஆபிரகாம், இயக்குநர் அன்பழகன் உள்ளனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர்கள் சந்தித்து தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவிடும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தை 3-ம் பாலினத்தவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும், ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்தப்படுவர் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தனர்.



சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் நினைவிடத்தில் நேற்று தமிழ்நாடு அரசின் 2025-2026-ம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக நேற்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அண்ணாவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மரியாதை

சென்னை, மார்ச் 16-

வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளதைய டுத்து, சென்னை மெரீனாவில் உள்ள அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மரியாதை செலுத்தினார்.

தமிழக அரசின் 2025-26-ம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்டப் பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து பேசியதாவது:-

பட்ஜெட்டில் பல்வேறு துறைகள் சார்ந்த முக்கிய அறிவிப்புகள், நிதி ஒதுக்கீடுகள் அறிவிக்கப்பட்டன.

தொடர்ந்து 2025-26-ம் நிதியாண்டுக்கான வேளாண் நிதி நிலை நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இதையடுத்து சென்னை மெரீனாவில் உள்ள அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அடுத்த ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்பாக தி.மு.க. தலைமையிலான அரசு தாக்கல் செய்யும் முழுமையான நிதிநிலை அறிக்கை இதுவாகும்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் கீழ் Startup-TN மூலம் தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதி திட்டத்தின் கீழ் தேரந்தேடுக்கப்பட்ட 4 தொழில் முனைவோர்களுக்கு ரூ.5 கோடியே 20 லட்சம் முதலீட்டுக்கான ஆணைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் அதுல்ஆனந்த், சிவராஜா உடனிருந்தனர்.



சென்னை தீவுத்திடலில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு குறித்து மாணவ, மாணவியர்களுக்கான மாரத்தான் ஓட்டத்தினை நேற்று அமைச்சர்கள் அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் முதன்மைச்செயலாளர் சத்யபிரத சாகு, இயக்குநர் த.மோகன் மற்றும் மாணவ-மாணவியர்கள், ஆசிரியர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் சுப்ரீம் கோர்ட் கிளை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 16-

சுப்ரீம் கோர்ட்டு கிளையை சென்னையில் அமைக்க வேண்டும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை ஐகோர்ட்டு வளாகத்தில் நடைபெற்ற மெட்ராஸ் பார் அசோசியேசனின் 160வது ஆண்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.

விழாவில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ், கே.வி.விஸ்வநாதன், ஆர்.மகாதேவன், சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

விழாவில் பேசிய மு.க.ஸ்டாலின் கூறியதாவது ,

இந்தியாவிலேயே தலைசிறந்த பாரம்பரியம் கொண்டது சென்னை ஐகோர்ட்டு. சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துவதில் வழக்கறிஞர்களின் பங்கு முக்கியம் . அரசமைப்பின் முக்கிய விஷயமான கூட்டாட்சி தத்துவம் பாதிக்கப்பட்டு வருகிறது.

கல்வி நிதி போன்றவற்றில் மாநில அரசுகள் பாதிக்கப்படுகின்றன.

அரசமைப்பை பாதுகாப்பதில் சிறந்த பங்களிப்பை சென்னை ஐகோர்ட்டு அளித்து வருகிறது.

சுப்ரீம் கோர்ட்டு கிளையை சென்னையில் அமைக்க வேண்டும் . தென் மாநில மக்கள் வழக்கறிஞர்களுக்கு பயனாக அமையும் என தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு கடன் வழங்க ரூ.20,500 கோடி இலக்கு:

# தமிழ்நாடு வேளாண் பட்ஜெட்டுக்கு துணை முதல்வர் உதயநிதி பாராட்டு

சென்னை, மார்ச் 16-

உழவர் பெருமக்கள் மகிழும் வகையில் சுமார் ரூ.45,661 கோடி அளவுக்கு வேளாண்மை பட்ஜெட் அமைந்துள்ளதில் மகிழ்ச்சி கொள்கிறேன் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற வேளாண் பட்டதாரி இளைஞர்களை கொண்ட முதல்வரின் உழவர் நல சேவை மையங்கள், நெல் சாகுபடி பரப்பளவை உயர்த்த சிறப்புத் திட்டம், மழைவாழ் உழவர்கள் முன்னேற்றம், உழவர் சந்தைகளில் இருந்து ஆன்லைன் முறையில் பொருட்களை டெலிவரி செய்யவும் தனித்திட்டம், உழவரைத் தேடி வேளாண்மைத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல், கூட்டுறவு பயிர்க்கடன் - குறுகிய காலக் கடன் வழங்க என ரூ.20,500 கோடி இலக்கு, வேளாண் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க, டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி... இப்படி உழவர் பெருமக்கள் மகிழும் வகையில் சுமார் ரூ.45,661 கோடி அளவுக்கு நம் திராவிட மாடல் அரசின் வேளாண்மை பட்ஜெட் அமைந்துள்ளதில் மகிழ்ச்சி கொள்கிறோம். உழவர் வாழ்வு செழிக்கட்டும்! வேளாண்மைத்துறையிலும் தமிழ்நாட்டின் சாதனைகள் தொடரட்டும்'' என்று கூறியுள்ளார்.

# வேளாண் துறைக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

கடந்த 2021-ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட விவசாய பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு, மொத்த பயிர்க்கடன் தள்ளுபடியான 12,110 கோடியே 70 லட்சம் ரூபாயில், தற்போதுவரை, தள்ளுபடித் தொகையாக 10,336 கோடியே 40 லட்சம் ரூபாயும், தள்ளுபடித் தொகை மீதான வட்டியாக 90 லட்சம் ரூபாயும் தமிழக அரசால் விடுவிக்கப்பட்டுள்ளன. 2025-26 ஆம் ஆண்டில் பயிர்க்கடன் தள்ளுபடிக்கென 1,477 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீன்வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, மீன்வியாபாரம் போன்ற சுய தொழில்களை மேற்கொள்ள 10,000 மீனவர் மற்றும் மீனவ உழவர்களுக்கு விவசாய கடன் அட்டை வழங்கப்படும். இதன்மூலம் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகள் அதிகரித்திடும்.

### 29 மாவட்டங்களில்...

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள் அல்லாத 29 மாவட்டங்களில் நெல் சாகுபடி அதிகரிக்க சிறப்புத் தொகுப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும். கோடை உழவு செய்ய ஹெக்டேருக்கு ரூ.2,000 மானியமாக வழங்கப்படும். 30 லட்சம் உழவர்களுக்கு பயிர்க் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு விபத்து மரண இழப்பீடு, இறுதிச் சடங்கு செலவு தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. காவிரி படுகை மாவட்டங்களில் குறுவை சாகுபடியை அதிகரிக்க சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். உழவர் நல மையங்கள் வாயிலாக ரூ.3 லட்சம் முதல் ரூ.6 லட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

### உழவு செய்ய மானியம்

மலைப்பகுதி விவசாயிகள் முன்னேற்றத்துக்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். மானாவரி நிலங்களில் 3 லட்சம் ஹெக்டேரில் கோடை உழவு செய்ய ரூ.2,000 மானியமாக வழங்கப்படும். தமிழ்நாட்டில் 16.3 லட்சம் ஹெக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. 2023 - 24ஆம் ஆண்டில் 147 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. "2021-24 வரை 147 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் நீர்ப்பாசன பகுதிகளில் கால்வாய்களை தூர்வாரியதால், 89.90 லட்சமாக இருந்த பாசன பகுதி 96 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

### ஊக்கத்தொகை உயர்வு

கரும்பு உற்பத்தியில் தமிழகம் 2 ஆம் இடத்தில் உள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 215 ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது கரும்புக்கான ஊக்கத்தொகை டன் ஒன்றுக்கு ரூ.349 ஊயர்த்தப்பட்டுள்ளது. 1,000 முதலமைச்சர் உழவர் நல சேவை மையம் அமைக்க ரூ. 42 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை 30 லட்சம் உழவர்களுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பயிர்க் கடன் ரூ. 3.58 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

வேளாண் பட்டதாரிகளை வேளாண் தொழில் முனைவோர்களாக ஆக்கும் திட்டத்தில் 431 இளைஞர்கள் தொழில் முனைவோர்களாக மாறி உள்ளனர். அவர்களுக்கு தலா ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# வேளாண் பட்ஜெட்...(1-ம் பக்க தொடர்ச்சி)

23) 17,000 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கப்படும்.

24) வெண்ணைப்பழ சாகுபடியை 500 ஏக்கரில் ஊக்குவிக்க ரூ.69 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

25) ரூ.5 கோடியில், புதிய பலா ரகங்களை பரவலாக்க, பலா மதிப்புக் கூட்டுதலுக்கான பயிற்சி வழங்கப்படும்.

26) பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பனை சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க ரூ.1.65 கோடி ஒதுக்கீடு.

27) தமிழ்நாடு முந்திரி வாரியம் ரூ.10 கோடியில் அமைக்கப்படும்.

28) சீமைக்கருவேலை மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடியை மேற்கொள்ள ரூ.11.74 கோடி ஒதுக்கீடு.

29) ரூ.1 கோடியில் உதிரிவகை ரோஜா மலர்களின் சாகுபடி 500 ஏக்கரில் மேற்கொள்ள சிறப்புத் திட்டம்.

30) ரூ.1.60 கோடியில் பாரம்பரிய மல்லிகை சாகுடியை அதிகரிக்க மல்லிகைக்கான சிறப்புத் திட்டம்.

31) மலர்கள் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.8.51 கோடி ஒதுக்கீடு.

32) வெங்காய சேமிப்புக்கூடங்கள் ரூ.18 கோடியில் அமைக்கப்படும்.

33) ரூ.2.4 கோடியில் பாரம்பரிய காய்கறி ரகங்களின் சாகுபடியை 2,500 ஏக்கரில் மேற்கொள்ளப்படும்.

34) ரூ.1,168 கோடியில் நீர் ஆதாரத்தை திறம்பட பயன்படுத்துவதற்காக, நுன்னீர் பாசனத் திட்டம்.

35) இயற்கை வேளாண்மையை பரவலாக்கம் செய்திட இயற்கை வேளாண்மைத் திட்டங்கள் உருவாக்கப்டும்.

36) உயிர்ம விவசாயிகளுக்கு இலவச உயிர்ம வாய்ப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

37) உயிர்ம விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

38) உயிர்ம விளைபொருட்களில் எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனைக் கட்டணத்துக்கு விவசாயிகளுக்கு முழு மானியம்.

39) ரூ.52.44 கோடியில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் தொடங்கப்படும்.

40) ரூ.108.6 கோடி ஒதுக்கீட்டில் எண்ணெய் வித்துகள் இயக்கம் தொடங்கப்படும்.

41) ரூ.40.27 கோடியில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்'' தொடங்கப்படும்.

42) கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்க ரூ.297 கோடி ஒதுக்கீடு.

43) விதைகள், பிற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

44) 100 முன்னோடி விவசாயிகள் ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

45) இயற்கை சீற்றங்களால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு ரூ.841 கோடியில் பயிர் காப்பீட்டுக்கு ஒதுக்கப்படும்.

46) பருத்தியின் உற்பத்தியை அதிகரித்திட "பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம்'' உருவாக்கப்படும்.

47) விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் 3,000 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிக்கப்பட்டுக் கொள்முதல் செய்யப்படும்.

48) ரூ.42 கோடியில் 1,000 உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும்.

49) பசுமைத் தமிழ்நாட்டை உருவாக்க "தமிழ்நாடு வேளாண்காடுகள் கொள்கை'' உருவாக்கப்படும்.

50) டெல்டா அல்லாத 29 மாவட்டங்களில் நெல் சாகுபடி அதிகரிக்க சிறப்பு தொகுப்பு திட்டம் உருவாக்கப்படும்.

51) மானாவாரி நிலங்களில் 3 லட்சம் ஹெக்டேரில் கோடை உழவு செய்ய ஹெக்டேருக்கு ரூ.2,000 மானியம் வழங்கப்படும்.

52) மலைப்பகுதி விவசாயிகள் முன்னேற்றத்துக்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## ஆதார் - வாக்காளர் அட்டை இணைப்பு:

# வரும் 18-ம் தேதி இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை

புதுடெல்லி, மார்ச் 16-

ஆதார் எண்ணுடன் வாக்காளர் அடையாள அட்டை விவரத்தை இணைப்பது தொடர்பாக உள்துறை செயலாளருடன் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டியுள்ளார் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார். வரும் 18-ம் தேதி இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதை கட்டாயமாக்கும் நடவடிக்கைகளில் இந்திய தேர்தல் ஆணையம் இறங்கி உள்ளது. அதன் ஒரு பகுதியாகவே இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவதாகத் தெரிகிறது. வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடப்பதாக காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் குற்றஞ்சாட்டி வரும் சூழலில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. அண்மையில் மக்களவையில் பேசிய மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, "நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றன. மகாராஷ்டிரா உட்பட ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்க்கட்சிகள் ஒரே குரலில் கேள்விகளை எழுப்பியுள்ளன'' என்று கூறியிருந்தார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சியானது தேர்தல் ஆணையத்தின் மீது கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது. பல்வேறு மாநிலங்களிலும் போலி வாக்காளர் அடையாள அட்டைகள் புழக்கத்தில் இருப்பதாகவும், வாக்காளர்கள் பெயர்கள் சேர்ப்பு, நீக்கத்திலும் குளறுபடி இருப்பதாகவும், தேர்தல் ஆணையம் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தது.

இத்தகைய குற்றச்சாட்டுகளை ஒட்டி, "இந்திய தேர்தல் ஆணையத்தின் பாரம்பரியத்தை கேள்விக்குறியாக்கும் வகையில் குற்றச்சாட்டுகள் முன்வருகின்றன. அடுத்த மூன்று மாதங்களில் இந்தச் சிக்கலுக்கு தீர்வு எட்டப்படும்'' என்று தேர்தல் ஆணையம் கூறியிருந்தது. இந்நிலையில்தான் தலைமைத் தேர்தல் ஆணையர், உள்துறை செயலர், சட்டப்பேரவை செயலர் மற்றும் யுஐடிஏஐ அமைப்பின் சிஇஓ ஆகியோருடன் ஆலோசனை மேற்கொள்ளவிருக்கிறார்.

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதை கட்டாயமாக்க வேண்டும் என மத்திய அரசிடம் இந்திய தேர்தல் ஆணையம் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தது. இதனடிப்படையில் கடந்த 2021-ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. மக்கள் பிரதிநித்துவச் சட்டம் 1950 பிரிவு 23-ன் படி வாக்காளர் பதிவு அலுவலகம் வாக்காளர்களிடமிருந்து ஆதார் எண்ணை பெற வேண்டும் என வலியுறுத்துகிறது. ஆனாலும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயம் ஆக்கப்படவில்லை. சிலர் தாமாகவே முன்வந்து வாக்காளர் அடையாள அட்டையில் ஆதார் எண்ணை இணைத்தும் வருகின்றனர். இருப்பினும், அவ்வாறாக வாக்காளர் அடையாள எண்ணுடன் தங்களின் ஆதார் விவரத்தை இணைக்காதவர்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாது என்பதையும் அரசு தெளிவுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.